
16 - 31 மே 99

www.padippakam.com

ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்

## யாருக்கு வேண்டும் நிலையான ஆட்சி?



www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## ஜெயாவின் பகற்கொள்ளை

வளர்ப்பு மகன் திருமணம் தொடங்கி, 48 பெட்டிகளுடன் தில்லிக்குச் சென்று ''டேரா'' போட்டிருப்பது வரை, ஜெயாவின் பணபலமும், ஆடம்பரமும் ஊரறிந்த உண்மை. ஆனால், ஜெயாவோ, ஹைதராபாத் நகரில் தனக்குச் சொந்தமாக உள்ள திராட்சைத் தோட்டத்தைக் காட்டி, தான் ஒரு சாதாரண விவசாயி என்றும், ஆந்திர மாநில அரசு தனக்கு மானியம் கொடுத்து உதவ வேண்டும் என்றும் மனுப்போட, ஆந்திர அரசும் ஜெயாவுக்கு இரண்டு இலட்ச ரூபாயை மானியமாகத் தூக்கிக் கொடுத்துவிட்டது. ஜெயாவின் 'நாணய'த்தைப் பாராட்டுவதா? இல்லை, ஆந்திர அரசின் கடமையுணர்ச்சியைப் பாராட்டுவதா?

## அமெரிக்க டாலருக்கு தொழிலாளி பலிகடா

பா.ஜ.க அரசு கவிழ்வதற்குச் சில நாட்கள் முன்னதாக, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைக்குப் பணிந்து ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் மேலும் தாராளமயத்தைப் புகுத்தியது. இதன்படி, நாடெங்கும் பல பகுதிகளில் அமைந்துள்ள ஏற்றுமதி வளாகங்கள், இனி சுதந்திர வர்த்தகப் பகுதிகள் (Free Trade Zones) என அழைக்கப்படும் என்று அறிவித்துள்ளதோடு, அப்பகுதிகளில் இயங்கும் நிறுவனங்களில் இந்தியத் தொழிலாளர் நலச் சட்டம் எதுவும் செல்லுபடியாகாது என்றும் உத்தரவிட்டுள்ளது.

## தனியார்மயமாகும் அரசு வங்கிகள்

காப்பீடு துறையைத் தனியார் மற்றும் அந்நிய முதலாளிகளுக்குத் திறந்துவிட்ட கையோடு, அரசு வங்கிகளையும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI),சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) போன்ற அரசு நிதி நிறுவனங்களையும் தனியார்மயமாக்க முடிவெடுத்துள்ளது இந்திய அரசு. இதன்படி, இவ்வங்கிகளில் 33 சதவீதப் பங்குகளைதான் அரசு வைத்துக் கொள்ளும்; மீதி 67 சதவீதம் பங்குகள் பங்குச் சந்தையின் மூலம் தனியாரிடம் விற்கப்படும்.

## குடும்ப மானத்தைக் காக்க பெண்கள் படுகொலை

பாலியல் வல்லுறவுக்குப் பலியான பாகிஸ்தானைச் சேர்ந்த கண் தெரியாத இளம் பெண்ணை, அப்பெண்ணின் உறவினர்கள் குடும்ப மானத்தைக் காப்பாற்றுவதற்காகப் பகிரங்கமாகச் சுட்டுக் கொன்றனர். இப்படுகொலை நடந்த அடுத்த சில நாட்களிலேயே, 27 வயதான சமியா இம்ரான் என்ற பெண் தனது குடும்பத்தினரின் விருப்பத்திற்கு எதிராக, தனது கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற முயன்று வந்ததால், சமியாவின் தாயார் ஏவிய கூலி கொலைகாரனால், லாகூரிலுள்ள பாகிஸ்தான் மனித உரிமைக் கமிசன் அலுவலகத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். தாலிபான் பாணி மதவெறிக் கருத்துகள் பாகிஸ்தானிலும் செல்வாக்குப் பெறுவதுதான் இப்படுகொலைகளுக்குக் காரணம் எனக் குற்றஞ் சுமத்திய பெண்கள் அமைப்புகள், இதற்கு எதிராக நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

## தேசிய நீரோட்டத்தின் பொருள்

காசுமீரில் அமைதி திரும்பிவிட்டதாகக் காட்டுவதற்கு இந்தி திரைப்படப் படப்பிடிப்பு நடந்தது தொடங்கி பல ஆதாரங்களைக் காட்டும் 'தேசிய' வாதிகள், சமீபத்தில் சிறீநகரில் சீமைச் சாராயக் கடைத் திறக்கப்பட்டிருப்பதைக் காட்டி, தீவிரவாதிகளின் செல்வாக்கு முற்றிலும் சரிந்து விட்டதாக ஆர்ப்பரிக்கின்றனர். காசுமீர் பள்ளத்தாக்கில், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் தீவிரமடைந்தபின், போராளிகள் அங்கிருந்த சீமைச் சாராயக் கடைகள் அனைத்தையும் இழுத்து மூடிவிட்டனர். கிட்டதட்ட 9 ஆண்டுகளுக்கு பிறகு, சிறீநகரில் இராணுவப் பாசறைக்கு அருகில், மிகப் பாதுகாப்பான இடத்தில் சாராயக்கடை திறக்கப்பட்டுள்ளது. தேசிய நீரோட்டத்தில் இணைவது என்றால், அது சாராயக்கடையைத் திறந்து விடுவதுதான் போலும்!

## பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் திறமை

இந்திய வருமான வரித் துறை அதிகாரிகள் சமீபத்தில் 60 பன்னாட்டு நிறுவன அலுவலகங்களில் அதிரடிச் சோதனை நடத்தி, அவை 500 கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். ஜப்பானை சேர்ந்த சுஸுகி நிறுவனம் ரூ.100 கோடியும், டோக்கியோ - மிட்சுபிசி வங்கி ரூ. 50 கோடியும் வரி ஏய்ப்பு செய்துள்ளன. இவை தவிர, சாம்சங், சுமிடோமா, ஹியாத் ஹோட்டல் எனப் பல 'புகழ்' பெற்ற நிறுவனங்கள் வரிகட்டாமல் ஏய்த்துள்ளன.

## டன்லப் ஆலைத் தொழிலாளி தற்கொலை தாராளமயத்தின் எதிர் விளைவு

சென்னையில் மூடிக்கிடக்கும் டன்லப் ஆலைத் தொழிலாளியான ஆறுமுகம், கடந்த மாதம் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். ஆலை மூடப்பட்ட பின், கடந்த 18 மாதங்களாக அரைகுறைப் பட்டினியாய் வாட்டிய வறுமை ஒருபுறம்; வயதுக்கு வந்த மூன்று மகள்களுக்கு இன்னும் திருமணம் செய்து வைக்க முடியவில்லையே என்ற கவலை மறுபுறம். இந்த மன உளைச்சலில் இருந்து விடுபட, ஆறுமுகத்திற்கு தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. சென்னையிலும், கல்கத்தாவிலும் இயங்கி வந்த டன்லப் ஆலைகள் மூடப்பட்ட பின் விழுந்துள்ள இரண்டாவது பலி இது. ஆனால், ஓட்டுக் கட்சிகளுக்கோ தொழிலாளி செத்துப் போவதைத் தடுப்பதைவிட, நாடாளுமன்றத்தின் மூச்சு நின்றுவிடுமோ என்ற கவலை தான் பெரிதாகத் தெரிகிறது.

**இந்திய அரசு வங்கியின் ''கிரெடிட் கார்டு'' திட்டத் துவக்க விழா: மக்களின் சேமிப்பிற்கு வந்தது ஆபத்து**




## ''கிரெடிட் கார்டு'' மோசடிகள்

தாராளமயமாக்கலுக்குப் பிறகு, பன்னாட்டு வங்கிகளைக் காப்பியடித்து இந்திய அரசு வங்கிகளும் ''கிரெடிட் கார்டு'' வியாபாரத்தில் இறங்கின. இந்திய மக்களின் சேமிப்பு, முதலாளிகளின் இலாபத்திற்காகவும், ஆடம்பரப் பிரியர்களின் சுயநலத்திற்காகவும் சூறையாடப்பட்டதுதான் கைமேல் கண்ட பலன். இந்திய அரசு வங்கிகள் இத்திட்டத்தில் முதலீடு செய்த 500 கோடி ரூபாயில், 163.25 கோடி ரூபாய் வராத கடனாக முடங்கிப் போய்க் கிடக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

இதழ்: 11 - 13

16 ஏப்ரல்'99 - 31 மே'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## ஓட்டுக் கட்சிகளின் நெறிமுறை: ''நாட்டு நலனை முன்னிட்டு துரோகம் தவிர்க்க முடியாதது''

பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சிக் கவிழ்ப்பை ஒட்டி எல்லா ஓட்டுக் கட்சிகளும் சந்தர்ப்பவாதக் கோமாளிகளாக மாறிவிட்டது மட்டுமல்ல; துரோகிகளாகவும் மாறிவிட்டதும் முற்றிலும் அம்பலமாகி விட்டது. துரோகம் மன்னிக்க முடியாத குற்றம்; ஆனால் நாட்டு நலனை முன்னிட்டு துரோகம் தவிர்க்க முடியாதது என்பது ஓட்டுக்கட்சிகளின் இன்றைய பொதுக் கொள்கையாகி விட்டது.

நடப்பு நிதியாண்டுக்கான வரவு - செலவு அறிக்கைக்கு முன்னும் பின்னும் பாரதீய ஜனதா அரசு திணித்த விலையேற்றம் மற்றும் பொருளாதாரத் தாக்குதலை எதிர்த்து 'இடது' - வலது போலி கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களையும் நடத்தின. குறிப்பாக, அரசுத்துறை நிறுவனங்களையும் காப்பீட்டுத் துறையையும் தனியார்மயமாக்குவதை எதிர்த்து தலைநகர் தில்லியில் கண்டனப் பேரணிகளை நடத்தின.

''இந்திரா ஆவாஸ் யோஜனா'', ''ஜவஹர் ரோஜ்கர் யோஜனா'' ஆகிய ''வறுமை ஒழிப்பு''த் திட்டங்களின் பெயர்களை பாரதீய ஜனதா மாற்றியதை ரத்து செய்ய வேண்டும் என்று காங்கிரசுக் கட்சி ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. அறக்கட்டளை என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் விசுவ இந்து பரிசத்துக்கு வரிவிலக்குச் சலுகை அளிப்பதை எதிர்த்தது. வரவு - செலவு அறிக்கையில் விவசாயிகளின் நலன் புறக்கணிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து வெட்டுத் தீர்மானம் கொண்டுவரப் போவதாக முலயம் சிங்கின் சமாஜ்வாடி கட்சி சவடால் அடித்தது. ''இரயில்வே பட்ஜெட்''டில் தமிழகம் பாரபட்சமாக நடத்தப்படுவதை திராவிடக் கட்சிகள் எதிர்த்தன.

ஆனால், இந்த வீரதீர சவடால்கள் அனைத்தும் இன்று வெற்றுவேட்டாகி விட்டது. பாரதீய ஜனதா ஆட்சி கவிழ்ந்து நாடாளுமன்றத்தில் வரவு - செலவு அறிக்கை நிறைவேற்றப்படாத நிலையில், பங்குச் சந்தையில் சரிவும் ரூபாய் மதிப்பு வீழ்ச்சியும் ஏற்பட்டு நெருக்கடி முற்றியது. நிச்சயமற்ற அரசியல் நிலைமைகளால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்று தரகுப் பெருமுதலாளிகளின் சங்கம் எச்சரித்தது. வரவு - செலவு அறிக்கை நிறைவேறாவிட்டால் சட்டபூர்வ நெருக்கடியும், அரசுக்கு வருமான வரி, சுங்கவரி இழப்பும் ஏற்படும்; தொழிலும் வர்த்தகமும் அந்நிய முதலீடுகளும் முடங்கி, பொருளாதாரத்துக்குப் பெருத்த பாதிப்பு ஏற்படும் என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டி மிரட்டின. அதைத் தொடர்ந்து அரசுத் தலைவர் நாராயணன் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, நாட்டு நலன் கருதி உடனடியாக வரவு - செலவு அறிக்கையை நிறைவேற்ற உத்திரவிட்டார். அதன்படியே கடந்த ஏப்ரல் 22-ந் தேதியன்று நடந்த நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் எவ்வித எதிர்ப்புமின்றி ஏகமனதாக பாரதீய ஜனதாவின் மக்கள் விரோத வரவு - செலவு அறிக்கையை நிறைவேற்றியுள்ளன.

மக்கள் மீது பொருளாதாரத் தாக்குதல் என்று பாரதீய ஜனதாவின் வரவு - செலவு அறிக்கையைச் சாடிய ஓட்டுக் கட்சிகள் அனைத்தும், ரூ. 2 லட்சம் கோடி அளவுக்கான வரவு - செலவு அறிக்கை மற்றும் நிதி ஒதுக்கீட்டை எவ்வித எதிர்ப்போ, திருத்தமோ, முணுமுணுப்போ இன்றி நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக, 15 நிமிடங்களில் குரல் வாக்குப் பதிவு மூலம் நிறைவேற்றின. ''இரயில்வே பட்ஜெட்''டை வெறும் 3 நிமிடங்களில் நிறைவேற்றியுள்ளன. இப்படி, நாட்டு நலன் என்ற பெயரில் கொள்கை - இலட்சியத்தைக் கைவிட்டு எல்லா ஓட்டுக் கட்சிகளும் வெளிப்படையாகவே துரோகமிழைப்பது என்பது புதிய விவகாரமல்ல. ஏற்கனவே குஜ்ராலின் ஐக்கிய முன்னணி சிறுபான்மை அரசு கவிழ்க்கப்பட்ட போதும் நாட்டு நலன் கருதி ப.சிதம்பரத்தின் பொருளாதாரத் திட்டங்கள் எதிர்ப்பேயின்றி நிறைவேற்றப்பட்டன.

ஏகாதிபத்தியங்களிடம் நாட்டை அடகு வைப்பது, அரசு பயங்கரவாதத்தை ஏவி தேசிய இனப் போராளிகளையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் ஒடுக்குவது, இந்து மதவெறி பாசிச சக்திகளுடன் சமரசம் செய்து கொள்வது ஆகியவை தான் எல்லா வண்ண அரசியல் கட்சிகளின் ஒரே தீர்வாக உள்ளது. மக்கள் நலனுக்கு அப்பாற்பட்ட, அதைவிட உயர்வான நாட்டு நலன் என்ற பெயரில், இட்லர் வழியிலான பாசிசத்தைத் திணிப்பதையே அவை நோக்கமாகக் கொண்டுள்ளன. போலியான ஜனநாயகம், போலியான சமூக நீதி, போலி மதச்சார்பின்மை பேசிய ஐக்கிய முன்னணி, இடதுசாரிக் கூட்டணியும் இதை அடியொற்றியே செல்கின்றன. இடதுசாரி, வலதுசாரி, மையவாதி, தேசியம், பிராந்தியம், மண்டல், கமண்டல் - என வேறுபட்ட கொள்கைகளுடன் நாடகமாடி வந்த ஓட்டுக் கட்சிகள் அனைத்தும், இன்று, தமது முகத்திரையைக் கிழித்தெறிந்து விட்ட பிறகு, நாட்டு மக்கள் இத்துரோகக் கட்சிகள் மீது நம்பிக்கை வைக்க எந்த அடிப்படையும் இல்லை.

ஆகவே, நாடு மறுகாலனியாகிவரும் இத்தருணத்தில், ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ - இந்துவெறி பாசிசத்துக்கு எதிராக புரட்சிகர - ஜனநாயகச் சக்திகளின் தலைமையில் உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராடுவது என்கிற முற்றிலும் மாறுபட்ட பாதைதான், நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஆட்சிக் கலைப்பும் அருத்த தேர்தலும்

# யாருக்கு வேண்டும் நிலையான ஆட்சி?

மத்தியில் கடந்த பதின்மூன்று மாத காலமாக ஆண்டு வந்த பாரதீய ஜனதாக் கட்சி - வாஜ்பாயி தலைமையிலான கூட்டணி ஆட்சி கவிழ்ந்துவிட்டது அல்லது கவிழ்க்கப்பட்டு விட்டது. இதுவரை காணாத அளவு, ஒரு குறுகிய காலத்திலேயே பன்னிரெண்டாவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. எப்போது தேர்தல்கள் நடத்துவது என்கிற இன்னொரு குழப்பம் பிறந்துவிட்டது.

இவற்றின் மூலம் நாடாளுமன்ற அராஜகமும், அதன் விளைவான அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் இன்னொரு உயர்ந்த கட்டத்தை எட்டியிருக்கிறது. இது இன்னும் மேலே போகுமே தவிர நாடாளுமன்ற ஜனநாயக விரும்பிகள் எதிர்பார்ப்பதைப் போல இறங்காது. இறுதியில் நாடாளுமன்ற ஆட்சிமுறையையே பலி கொள்ளும் வரை இப்படித்தான் நடக்கும்.

இந்த நிலைமைக்குக் காரணமானவர் என்று ஒருவர் மீது மற்றவர் பழிபோடும் படலம் இப்போது ஆரம்பித்திருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியும், கூட்டணியும் தமது அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை முன் வைத்து ஒட்டுப் பொறுக்குவது என்றில்லாமல், இப்போதைய அரசியல் நிலைக்கு, திடீர் இடைத் தேர்தல்களுக்கு ''யார் பொறுப்பு'' என்கிற பழிபோட்டுப் பேசி, ஆதாயம் அடைவதே அரசியல் என்றாகிவிட்டது. அடிப்படைப் பிரச்சினைகளை விட்டுவிட்டு அனல் பறக்கும் சவால்கள் - சவடால்கள் மீது மக்களின் கவனத்தை ஈர்ப்பதுதான் அவர்களின் நோக்கம். இதற்கு உடந்தையாகவே பத்திரிக்கைகள், வானொளிகள் ஆகிய மக்கள் செய்தித் தொடர்புச் சாதனங்களின் ஆராய்ச்சிகளும் செயல்பாடுகளும் அமைக்கப்படுகின்றன.

இப்போது, ''நாட்டை யார் ஆள்கிறார்கள் என்பது பிரச்சினை இல்லை. இந்த நிலையற்ற - நிச்சயமற்ற ஆட்சி என்ற தன்மை போகவேண்டும். எப்படியாவது மத்தியில் ஒரு நிலையான ஆட்சி அமைந்தாகவேண்டும். இல்லையென்றால் நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்படும். ஆண்டுக்கொருமுறை தேர்தல்கள், அடிக்கடி ஆட்சி மாற்றம் என்பதை நாடும் மக்களும் தாங்கமாட்டார்கள்'' என்ற வகையில் சிந்திக்கும்படி மக்களின் கருத்து கட்டமைக்கப்படுகிறது.

''யார் ஆண்டாலும் பரவாயில்லை; தேவையானது நிலையான ஆட்சிதான், அதுதான் தேசியநலனுக்கானது'' என்கிற கருத்து சரியானதா? உண்மையானதா? இப்படிச் சொல்வது சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளுக்கு புத்தி சொல்லித் திருத்தும் கருத்தா?

இல்லை; ''யார் ஆண்டாலும் பிரச்சினையில்லை, தேவையானது நிலையான ஆட்சி. அதுதான் தேசிய நலன்'' என்பதுதான் உண்மையில் சுயநல நோக்கமுடைய மிக மோசமான, மிகப்பெரிய சந்தர்ப்பவாதமாகும். எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல், பொருளாதார கொள்கைகளை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, ''நிலையான ஆட்சி; அதுவே தேசிய நலன்'' என்கிற பெயரில் சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்துக் கொள்வதற்கு இந்தக் கண்ணோட்டம் நியாயம் கற்பிக்கிறது.

இதை வைத்துத்தான் ஜெயா - வைகோ - இராமதாசு முதற்கொண்டு ஹெக்டே - மமதா - பெர்னாண்டஸ்வரை பா.ஜ.க.வுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைவதை நியாயப்படுத்தினர். இப்போது, இதையே சொல்லித்தான் ''பகுத்தறிவு - திராவிட இனத் தலைவர்'' கருணாநிதி, பா.ஜ.க.வுடன் கூடிக் குலாவுகிறார். எப்படியாவது மாற்று அரசு அமைக்க வேண்டும் என்பதற்காக காங்கிரசு - அதிமுகவுடன் கூட்டுச் சேருவதைப் போலிக் கம்யூனிஸ்டுகள் நியாயப்படுத்துகின்றனர்.

தேசிய நலன் என்பதைக் காரணமாக வைத்து அனைத்துக் கட்சிகளும் - எதிரெதிர் நிலை பேசும் அரசியல் கட்சிகளும் - பா.ஜ.க. மைய அரசின் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தை பதினைந்தே நிமிடங்களில் எவ்விதத் திருத்தமும் விவாதமும் இல்லாமல் நிறைவேற்றின. இது அப்பட்டமான சந்தர்ப்பவாத மோசடி இல்லையா?

★☆★

நிலையான ஆட்சி அமையவில்லை என்றால் தேசிய நலன்கள் பாதிக்கப்படும் என்கிறார்களே, அந்த தேசிய நலன்கள் என்பவை எவை? பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்கிறார்களே, அது என்ன?

அவர்களே குறிப்பிடும்படி, ''பங்குச் சந்தை பங்குகளின் மதிப்பு வீழ்ச்சி அடைந்துவிடும்; சர்வதேசச் சந்தையில், அந்நியச் செலாவணியில் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துவிடும்; தாங்கள் போடும் மூலதனத்துக்குப் பாதுகாப்பு உத்திரவாதமில்லை என்று கருதும் அந்நிய முதலீட்டாளர்கள் முதலீடு போடமாட்டார்கள். இவற்றால் தொழில்கள் பாதிக்கப்படும். அடிக்கடி அரசுகள் மாறுவதால் திட்டங்கள் தொடர்ச்சியாகவும், முறைப்படியும் நிறைவேற்ற முடிவதில்லை; தற்காலிக அரசுகள் நீடிப்பதால் அவை கொள்கை முடிவுகள் எடுப்பது இயலாமல் முடங்கி விடுகின்றன.''

அப்படியே நடக்கட்டும். அதனால் சாமானிய, உழைக்கும் மக்களுக்கு என்ன? பங்குச் சந்தை யாருக்காக இருக்கிறது. ஏகபோகத் தரகு முதலாளிகள் மூலதனம் திரட்டவும் சூதாடவும் தானே! இந்த நாட்டின் பங்குச் சந்தையில் எத்தனை சதவீத மக்கள் முதலீடு செய்கிறார்கள்? அதன் வீழ்ச்சியால் பாதிக்கப்படுபவர்கள் மேல்தட்டு வர்க்கத்தினர் தவிர, மக்களா? அந்நிய முதலீடுகள் வருவது இந்த நாட்டு மக்களுக்கு சேவை செய்யவா? அதன் வரவால் ஆதாயம் அடைபவர்கள் தரகு முதலாளிகள்தானே தவிர, உழைக்கும் மக்களா?

திட்டங்கள் பாதிக்கப்படுவதாகக் கூறுவது இன்னொரு தவறு. கடந்த மூன்றாண்டுகளில் மூன்று கூட்டணி அரசுகள் வந்து

**ஊழல் மகாராணிகளின் புதிய கூட்டணி**





படிப்பகம்

www.padippakam.com

போயின. மூன்று ஆண்டு வரவு - செலவு அறிக்கைகளும் எவ்வித எதிர்ப்பும் மாற்றமும் இல்லாமல் நிறைவேறின. காங்கிரசு துவங்கி வைத்த உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் ஆகிய புதிய பொருளாதாரக் கொள்கை - பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பாதையில் இருந்து இந்தியா மாறிச் செல்லாது, உறுதியாகப் பின்பற்றும் என்றுதான் அடுத்தடுத்து வந்த மூன்று கூட்டணி அரசுகளும் அந்நிய ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்கு உறுதியளித்தன. போலி கம்யூனிஸ்டு, தி.மு.க. உட்பட புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான நிலைப்பாடுகளை அவ்வப்போது பிதற்றும் கட்சிகள் ஆளும் மாநில அரசுகள் கூட இதையே கடைப்பிடிக்கின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இராஜாஜி தலைமையில் சுதந்திரா கட்சி என்றொரு கட்சி இருந்தது. ''நேரு - இந்திராவின், உரிமை - ஒதுக்கீடு - அனுமதி (லைசென்சு - கோட்டா - பர்மிட்) முறை தொழில் வளர்ச்சிக்குக் கேடான சோசலிசக் கொள்கை'' என்று சாடிய அக்கட்சி, ஏகபோக முதலாளிகள் - முன்னாள் மன்னர்களின் கட்சியாக அப்பட்டமாகப் பிரகடனப் படுத்திக் கொண்டது. ''அன்றைய ஜனசங்கத்தைவிட பிற்போக்கானது; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி அமைப்பு'' என்று சுதந்திராக் கட்சியை போலிக் கம்யூனிஸ்டுகள், போலி சோசலிஸ்டுகள் கடுமையாக எதிர்த்தனர்.



எப்படியாவது பிரதமர் பதவியில் அமர்ந்து விட சோனியாவிடம் பேரம் நடத்திய ஜோதிபாசு.

ஆனால், அந்த சுதந்திரா கட்சியின் பொருளாதாரக் கொள்கையைத்தான் இன்று போலி கம்யூனிஸ்டு, போலி சோசலிச கட்சிகள் காங்கிரசு உட்பட அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. பொருளாதாரத்தில் அரசுக் கட்டுப்பாடுகளை - மையத் திட்டமிடுதலை முற்றாக நீக்கி விடுவது, சந்தையின் விதிகளுக்கு பொருளாதாரத்தைத் திறந்து விடுவது என்னும் புதிய பொருளாதாரக் கொள்கை, பொருளாதாரச் சீர்திருத்தம் என்பதெல்லாம் அக்கட்சியின் கொள்கைதான். இக்கொள்கையை எதிர்ப்பதாக அன்றும் இன்றும் வெளியில் புளுகும் போலிக் கம்யூனிஸ்டுகள், உண்மையில் - நடைமுறையில் அதையே பின்பற்றுகிறார்கள். அதற்கு ''சோசலிச சந்தைப் பொருளாதாரம்'' என்கிற புதிய நாமகிரணம் சூட்டியுள்ளனர் என்பதுதான் ஒரே வேறுபாடு.

இப்படி அனைத்துக் கட்சிகளும் பொருளாதாரக் கொள்கையில் ஒன்றுபடும் போது, அரசுகள் மாறுவதால் அதில் குறிப்பிடும்படியான மாறுதல்கள், தடைகள் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுவதற்கே இடமில்லை. அதுமட்டுமல்ல, நிலையற்ற ஆட்சியும், பொருளாதார நெருக்கடியும் மக்களைப் பாதிக்கும் என்பது கூட அந்த சுதந்திராக் கட்சியின் பின்வரும் முதலாளித்துவக் கொள்கை அடிப்படையிலானதுதான். ''முதலீடுகளும் தொழில்களும் பெருகினால் வேலைவாய்ப்புகள் பெருகும். அனைவருக்கும் வேலை கிடைக்கும். இதனால்தான் ஏழைகளின் வறுமை நீங்கி, வாழ்வு செழிக்கும்; சமூகப் பணிகளை அரசு கவனிக்க வேண்டியதில்லை. முதலாளிகளாகவே மேற்கொள்வார்கள்.''

இதுதான் இப்போது, இந்திய ஆட்சியாளர்கள் யாரானாலும் பின்பற்றும் பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கை. இது மக்கள் பிரச்சினைகளைத் தலைகீழாக அணுகும் முறை. உழைக்கும் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பை (அதிகாரத்தை) முதலாளிகளிடம் விட்டு விடும் அணுகுமுறை.

அரசுத்துறை ஆலைகளை மூடி, தொழிலாளர்களுக்கு வேலை இழப்புச் செய்வதற்கும், இலாபம் தரும் ஆலைகள் சேவை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கும், தடையின்றி அந்நிய ஏகபோக முதலாளிகள் சுரண்டவும், ரேஷன் கடைகளை மூடுவதில் இருந்து நகராட்சி குப்பை அள்ளுவதைத் தனியார் ஒப்பந்தத்துக்கு விடுவது வரை - இத்தகைய மக்கள் விரோதத் திட்டங்களை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றுகின்றன. இந்த நிலையில் நிலையற்ற அரசுகள் - அரசியல் காரணமாக இத்தகைய திட்டங்கள் முடங்கிப் போவது பற்றி மக்கள் ஏன் அக்கறைப் பட வேண்டும்?

★☆★

ஓட்டுக் கட்சிகள் ஏற்கனவே ஓர் அரசியல் பண்பாட்டை மரபைத் திட்டமிட்டு உருவாக்கியிருக்கிறார்கள்: ''அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம்''. ''அரசியலில் நிரந்தர எதிரியும் கிடையாது, நிரந்தர நண்பரும் கிடையாது.'' ''நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதே எண்ணிக்கை விளையாட்டுதான்.'' ''உலகில் எங்கே, எப்போது ஊழல் நடக்கவில்லை?'' ''அரசியல் என்பதே வாய்ப்புகளும் தெரிவுகளும் தான்.'' ''கூட்டணி என்பது தேர்தல் கால உடன்பாடுதான், அதற்கு முன்னரோ, பின்னரோ சந்தர்ப்பவாதக் கூட்டுகள் ஏற்படுவதும், முறிவதும் சாதாரணம்.'' ''தனிப்பட்ட உறவு என்பது வேறு, அரசியல் உறவு என்பது வேறு.''

இவை, ஓட்டுக் கட்சிகள் தமது சந்தர்ப்பவாதப் பித்தலாட்டங்களை நியாயப்படுத்துவதற்காக உருவாக்கிக் கொண்ட அரசியல் நெறிமுறைகள். இந்த ஓட்டுப் பொறுக்கி அரசியல் நெறிமுறைகளும் எப்படியாவது யார், யாருடனாவது சேர்ந்து நிலையான ஆட்சியைத் தரவேண்டும், அதுதான் தேச நலனுக்குச் சரியானது என்பதும் ஒரே அடிப்படையிலானதுதானே!

கடந்த தேர்தலின் போது ஜெயா - சசி கும்பல் என்ன செய்தது? தன்னுடைய இலஞ்ச - ஊழல், உல்லாச - ஊதாரித்தனங்களை எல்லாம் மூடி மறைத்துவிடவும், தான் திராவிட பாரம்பரிய உரிமை கோருவதற்கு முரணாகத் தேர்தல் கூட்டு சேருவதை மூடி மறைத்து விடவும், தேச நலனுக்கு, நிலையான ஆட்சிக்கு பா.ஜ.க.வுடன் கூட்டு என்று நியாயப்படுத்தினார்.

இந்தத் தேர்தலில் கருணாநிதி என்ன செய்கிறார்? ''பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஒரு மதவாத பாசிச சக்தி; திராவிடப் பாரம்பரியம் என்று சொல்லிக் கொள்ளும் ஜெயலலிதா அந்தத் தீய சக்தியை தமிழகத்துக்குக் கொண்டு வந்துவிட்டார்'' என்று பிரச்சாரம் செய்தார். இப்போது, அதே சக்தியைத் தோளில் தூக்கிச் சுமக்கிறார். ''யாராண்டாலும் சரி; நிலையாக ஆள அனுமதிக்க வேண்டும், ஆதரிக்க வேண்டும்'' என்கிறார். ஒருபுறம் திராவிடப் பாரம்பரிய உரிமைகோரி மக்களிடம் ஓட்டுப் பொறுக்குவது, மறுபுறம் நிலையான ஆட்சி காண சந்தர்ப்பவாத கூட்டு வைப்பது. ''நேருவின் மகளே வா, நிலையான ஆட்சி தா!'' என்றதில் இருந்து தொடங்கி 23 ஆண்டுகளாக இதே சந்தர்ப்பவாத அரசியல் நடத்துகிறார். இதில் ''அப்போதே



படிப்பகம்

www.padippakam.com

சொன்னேன், எப்போதும் இதுதான் எங்கள் கொள்கை'' பெருமையடித்துக் கொள்கிறார்! ''நிலையான ஆட்சி, தேசிய நலன்'' என்கிற கொள்கைதான் திராவிடக் கட்சிகளின் அடையாளமே இல்லாமல் அனைத்திந்திய தேசியத்தில் கரைந்து போனதற்கான நியாயமாக உள்ளது.

ஏற்கனவே, ஏதோ சில அரசியல் கட்சிகளாவது, தமது கட்சிக் கொள்கை, கோட்பாட்டைப் பின்பற்றுகின்றன. இந்த ''நிலையான ஆட்சி என்பதே தேசிய நலன்'' என்கிற புதுப் பிரச்சாரம்தான் அக்கட்சிகளை சந்தர்ப்பவாதத்தில் தள்ளுகின்றன என்பதல்ல நமது வாதம். எல்லா அரசியல் கட்சிகளுமே தமது கொள்கை, கோட்பாடுகளைக் குழி தோண்டிப் புதைத்து விட்ட நிலையில் ''நிலையான ஆட்சி என்பதே தேசிய நலன்'' என்கிற பிரச்சாரம் அவற்றின் அரசியல் சந்தர்ப்பவாதப் பித்தலாட்டங்களை நியாயப்படுத்தவே உதவும் என்கிறோம்.

ஊழலே பிரதான எதிரி என்கிற காரணத்திற்காக, பா.ஜ.க.வை ஆதரித்ததாகக் கூறும் தி.மு.க.வும், மதவாத ஆட்சியை வீழ்த்துவதற்காக காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்ததாகக் கூறும் போலி கம்யூனிஸ்டுகளும் முறையே பா.ஜ.க.வின் பல்வேறு ஊழல்களையும் காங்கிரசின் வகுப்பு வாதத் தன்மைகளையும் மூடி மறைத்து நற்சான்று தருகின்றன. இவர்களே முறையே ஊழல் பெருச்சாளிகளாகவும், மிதவாத வகுப்புவாதிகளாக இருப்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

இறுதியில், வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தல்களே போட்டியிடும் வெவ்வேறு கட்சிகளின் கொள்கை, கோட்பாடுகளை முதன்மையாக வைத்து நடக்காது. இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு யார் காரணம்? மாற்று அரசு அமைக்க முடியாமல் போனதற்கு யார் காரணம்? நிலையான ஆட்சி அமைவதற்கு யார் தடை? யாரால் நிலையான ஆட்சி தரமுடியும்? என்கிற கேள்விகளைச் சுற்றியே அமையும். நாட்டு மக்கள் நலனுக்கு யாருடைய அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் சரியாக இருக்கும் என்பதைத் தீர்மானிப்பதற்கானதாக அமையாது.

★☆★

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படை என்னவென்று அவர்கள் சொன்னார்கள்: ''பல்வேறு அரசியல் கட்சிகளில் யாருடைய அரசியல், பொருளாதாரக் கொள்கை, கோட்பாடு, நடைமுறை ஏற்புடையதோ அவர்களைத் தேர்ந்தெடுப்பது தான்'' என்றார்கள். இப்போது என்ன சொல்கிறார்கள்? ''சிறிய கட்சிகளை எல்லாம் கலைத்துவிட வேண்டும். மாநிலக் கட்சிகளுக்கு தடைவிதிக்க வேண்டும். தேசிய நலனே முக்கியம். மாநில நலன்களைப் பேசுவது பிரிவினைவாதம். இரண்டு கட்சி ஆட்சிமுறையே சிறந்தது. ஒருமுறை தேர்ந்தெடுத்தால் ஐந்தாண்டுகளுக்கு எந்த மாற்றமும் கூடாது'' என்று புதுப்புது யோசனையைச் சொல்லுகிறார்கள்.

இவையெல்லாம் என்ன? இன்றைய அரசியல் நெருக்கடிக்குக் காரணம் ஓட்டுப் போட்ட மக்கள் தான். ஏதோ ஒரு கட்சிக்கு பெரும்பான்மை பலத்தைத் தந்து நிலையான ஆட்சிக்கான வாய்ப்பு ஏற்படுத்தவில்லை என்று குறை கூறுகிறார்கள். தீர்வாக அந்த மக்களுக்குள்ள ஓட்டுப்போடும் வாய்ப்பைப் பிடுங்கிக் கொள்வதற்கு அல்லது வெட்டிச் சுருக்கி, சில பாசிச சர்வாதிகார நாடுகளில் நடப்பதைப் போல தேர்தல்களை மாற்றவேண்டும் என்கிறார்கள்.

முன்பெல்லாம் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஒரு கட்சிக்கே பெரும்பான்மை பலம் கிட்டியது. இப்போது எந்தவொரு கட்சிக்கும் தனியே ஆட்சி அமைக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்த ''தேசியக் கட்சி'' என்கிற மாயை காங்கிரசின் மீது இருந்தது. அந்த



'நிலையான ஆட்சி'க்காக மதவெறியர்களுக்கு கைகொடுத்தது தி.மு.க.

மாயை அகன்ற பிறகு நாடு முழுவதுமாக நம்பிக்கை வைக்கக் கூடிய கட்சி எதுவுமில்லாமல் போய்விட்டது. காங்கிரசுக்கு மாற்றாய் அமைந்த அரசுகள் எல்லாம் ''பிராந்திய'', மாநிலக் கட்சிகளின் கூட்டணிகளாகவே அமைந்தன. இன்று நாடு தழுவிய அளவில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற கட்சிகள் ஏதுமில்லை.

வர்க்கம், சாதி, மதம், தேசிய இனம், மொழி, பிராந்திய - வட்டார அடிப்படையில் வேறுபட்ட நலன்களைக் கொண்டது இந்த நாடு. இதற்கேற்ப தேர்தல் முடிவுகளும் பிளவுபட்டதாகவே இருக்கும். இதுவரை கண்ட கட்சிகள் எல்லாம் நம்பிக்கை துரோகம் செய்து அம்பலப்பட்டுவிட்டன. எனவே அனைத்திந்தியக் கட்சிகளும் ஒரு மாநிலத்தில் வெற்றி பெறும் அதேசமயம் மற்ற மாநிலத்தில் தோல்வியடைகின்றன.

ஆளும் வர்க்கங்களும், அதன் ஆதரவு பிற மேல் தட்டு வர்க்கத்தினரும் எதிர்பார்ப்பதைப்போல ''அகில இந்திய தேசிய நலனை ஏற்று ஆதரவளிக்கும் நிலையில் மக்களும் இல்லை. அப்படி ஒரு ஒத்த கருத்தை மக்கள் மீது திணிக்கும் முயற்சி தான் ''நிலையான ஆட்சி என்பதே தேசிய நலன்'' என்கிற கண்ணோட்டம். இல்லையென்றால், ''அரசுத் தலைவர் ஆட்சி முறை'' என்கிற யோசனை இன்னும் கூடுதலான சர்வாதிகார முறையைக் கொண்டு வரும் முயற்சி தான். இந்தத் தீர்வுகள் எல்லாம் நடைமுறைக்கு வந்தால் ''தேசிய நலன்'', ''தேசிய ஒருமைப்பாடு'' என்கிற அடிப்படையே தகர்ந்து போவதற்குத்தான் வழி வகுக்கும். அதுவும் நல்லதுதான்!

மொத்தத்தில் நாடாளுமன்ற ஜனநாயக முறையே நெருக்கடிக்குள்ளாகி, அதன் அந்திமக் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதைச் செயற்கையாகவோ, வன்முறையாகவோ நீட்டிக்கச் செய்யும் எந்த முயற்சியும் அந்த நோக்கத்துக்கோ எதிராகத்தான் போய் முடியும்.

மக்கள் ஜனநாயகம் அல்லது தேசிய ஜனநாயகத் திட்டம் என ஏதாவது ஒன்றை வைத்துக் கொண்டிருந்தாலும் அதைக் கிடப்பில் போட்டு விட்டு, நாடாளுமன்றத்துக்கு வலதுசாரிகளிடமிருந்து ஆபத்து வருகிறது என்று சொல்லிக் கொண்டு, அதைக் காக்கும் புனிதப் பணியில் போலி கம்யூனிஸ்டுகள் மூழ்கிப் போயுள்ளனர். உண்மையில் நாடாளுமன்றத்தைச் சுற்றிவரும் செக்குமாடுகளைப்போல பழகிப் போய்விட்ட இவர்களுக்கு மாற்று வழியைப் பற்றி சிந்திக்கும் திராணியோ, விருப்பமோ கிடையாது. சந்தர்ப்பவாத, பிழைப்புவாத அரசியல் சேற்றில் மூழ்கிப் போய்விட்ட இவர்கள் தான் நாட்டிலேயே மிகப்பெரிய அரசியல் தரகர்களாக உள்ளனர். அரசியல் அதிகாரத் தரகுத் தொழிலில் சுப்பிரமணிய சாமியுடன் கடும்போட்டியில் ஈடுபட்டிருக்கிறார் சுர்ஜீத்சிங். இவரோ, பிரதமர் பதவிக்காக நாக்கில் நீர்விட்டுக் கொண்டு காத்திருக்கும் ஜோதிபாசுவோ ஆக்கப்பூர்வமான மாற்றுவழி எதையும் சீர்குலைக்கவே முயலுவார்கள்.

நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் அராஜகம் காரணமாக இடிந்து விழுகிறது. அதைத் தாங்கிப் பிடிப்பது முற்போக்கான, புரட்சிகரமான செயலாக இருக்காது. அப்படிச் செய்வது அதன் இடிபாடுகளுக்குள் புதைந்து போவதாகவே முடியும். அதற்கு மாற்றுவழியாக வைக்கப்படும் அரசுத் தலைவர் ஆட்சிமுறை என்பது, இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த யாரையாவது பிற மக்களின் மீது திணிக்கும், முற்றாளுமைச் சர்வாதிகாரத்துக்கே வழிவகுக்கும்.

எனவே, பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் முன் வைக்கும் கீழிருந்து மேல் வரை சோவியத் வடிவிலான மக்கள் அதிகார அமைப்புக்களைப் புரட்சியின் மூலம் நிறுவுவதுதான் சிறந்த அரசியல் தீர்வாகும்.

• ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய-பாக். மதவெறியர்களின் சூழ்ச்சிகள்-சதிகள்-கொலைகள்

**காஷ்மீரின் தேசிய இனப் பிரச்சினையை, இந்து - முஸ்லீம் மதவாதப் பிரச்சினையாக மாற்றும் சதியில் இந்திய - பாக். மதவெறி ஆட்சியாளர்கள் இறங்கியுள்ளனர்.**

“ஜம்மு - காஷ்மீர், பஞ்சாபில் தீவிரவாதம் முறியடிக்கப்பட்டுவிட்டது. தற்போது தமிழகத்தில் தேசவிரோத சக்திகளின் செயல்பாடு அதிகரித்துள்ளது.”

*— பிரதமர் வாஜ்பாயி, திருச்சி பா.ஜ.க. மாநாடு, 22, மார்ச் 1999. (தினமணி)*

“ஜம்மு - காஷ்மீரின் சமீபகால வரலாறில் இது மிகமிக அபாயகரமான காலக்கட்டம்; கிட்டத்தட்ட முற்றாகவே நம்பிக்கை இழந்து போயுள்ளேன்”

*— பால்ராஜ் பூரி, பிராந்தியத் தன்னாட்சிக் கமிசன் முன்னாள் தலைவர், 26, மார்ச் 1999, ஃபிரண்ட்லைன்*

“வரும் கோடைகாலம் அனல் பறக்கக் கூடியதாக இருக்கும் என்றுதான் சொல்ல வேண்டும்”

*— ஜம்மு - காஷ்மீர் நிலைமை பற்றி அம்மாநிலப் போலீசு இயக்குனர் குர்பச்சன் ஜகத், 26, மார்ச் 1999, ஃபிரண்ட் லைன்*

கடந்த பிப்ரவரி 21 லாகூர் பேருந்துப் பயணத்தின் போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிஃப்புடன் பேச்சு வார்த்தை நடத்தி, லாகூர் பிரகடனம் பிறப்பித்த கையோடு, சிம்லா ஒப்பந்தத்திற்குப் பிறகு மாபெரும் வெற்றியைச் சாதித்துவிட்டதாக வாஜ்பாயி அறிவிக்கிறார்.

ஆனால், இப்பிரகடனத்திற்கு இரண்டு நாட்கள் முன்புதான் ஜம்மு பிராந்தியத்தில் உள்ள மூன்று கிராமங்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல்கள் நடத்திய பாகிஸ்தான் ஆதரவு மதவாத - தீவிரவாதக் குழு, மூன்று குழந்தைகள் உட்பட 20 பேரைச் சுட்டுக் கொன்றது.

இப்போது சொல்லுங்கள், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி பாசிசக் கும்பலிலேயே நாணயமானவர் - நல்லவர் என்று பீற்றிக் கொள்ளும் வாஜ்பாயி சொன்னவை உண்மையா? ஜம்மு - காஷ்மீரின் யதார்த்த நிலைமைக்குப் பொருத்தமாக உள்ளதா? நிச்சயமாக இல்லை; மாறாக, பாசிச பரிவாரத்தின் தகுதியான புளுகுணித் தலைவர்தான் வாஜ்பாய், என்று நிரூபிக்கிறது ஜம்மு - காஷ்மீர் நிலவரம்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேசியவெறி, மதவெறி ஆட்சி அமைப்புகள் நீடிக்கும் வரை, காஷ்மீருக்கு சுயநிர்ணய உரிமை கிடைக்கும்வரை அங்குள்ள தீவிரவாதப் பிரச்சினை முடிவுக்கு வராது. அதுமட்டுமல்ல, காஷ்மீரின் தேசிய இனப் பிரச்சினையை இந்து - முஸ்லீம் மதவாதப் பிரச்சினையாக மாற்றும் முயற்சியில் இரு நாட்டு மதவெறிக் கும்பல்களும் உள்ளூர் ஆதரவையும் பெற்று வருவது என்பது இப்போதைய பேராபத்தாகும்.

காஷ்மீர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகராக 1950-இல் இருந்த ஓவன் டிக்சன், ஒரு திட்டத்தை அப்போது முன்வைத்தார். சேனாப் ஆற்றின் வடகரையை சர்வதேச எல்லையாகக் கொண்டு, ஜம்மு பிராந்தியத்தில் இசுலாமியர் பெரும்பான்மையாக வாழும் தோடா, ரஜௌரி, பூஞ்சு பகுதிகளை காஷ்மீர் பள்ளத்தாக்குடன் இணைத்து, காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு விட்டுவிட வேண்டும்; இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் காத்துவா, ஜம்மு பகுதிகளை இந்தியாவுடன் இணைத்துவிட வேண்டும்; இதுதான் டிக்சன் திட்டம்.


போக்ரானில் இந்தியாவின் அணுகுண்டு சோதனையைத் தொடர்ந்து, காஷ்மீர் விவகாரத்தில் நேரடித் தலையீட்டை நியாயப்படுத்திவரும் அமெரிக்கா, இந்த டிக்சன் திட்டத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது. அமெரிக்காவின் காஷ்மீர் கொள்கைக்கான ஆலோசனை வழங்கும் “காஷ்மீர் ஆய்வுக் குழு” ஒரு திட்டத்தை முன்வைத்து அமெரிக்க அரசியல்வாதிகளிடையே சுற்றுக்கு விட்டுள்ளது. “காஷ்மீர்: முன்நகரும் ஒரு வழி” எனப்படும் அத்திட்டம், “ஜம்மு - காஷ்மீர் முன்னாள் சமஸ்தானத்தின் ஒரு பகுதி இந்தியா - பாகிஸ்தான் இரண்டோடும் தடையற்ற நடமாட்ட உரிமையுடைய சுயாதிபத்தியத்துடன் கூடியதாக மறுசீரமைக்க வேண்டும். அதற்கென்று சொந்த சட்டமன்றம், குடியுரிமை, உள்நாட்டு சட்ட அமைப்பு, இந்தியா - பாகிஸ்தான் இரண்டு நாடுகளின் பாதுகாப்பு உறுதியுடன் இருக்கும்.”

இந்தியா, பாகிஸ்தான் இரண்டுக்குமே இத்திட்டம் உடன்பாடானதில்லைதான் என்றாலும், மதரீதியில் பிரிவினை என்பதை பாகிஸ்தான் ஓரளவு ஏற்பதற்கு இடமுண்டு. இதையே அடிப்படையாக வைத்து பின்னர் காஷ்மீரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டுவிட முடியும் என்று பாகிஸ்தான் மனப்பால் குடிக்கிறது.

காஷ்மீரில் ஏகாதிபத்தியத் தலையீட்டை ஏற்கும் இந்திய அரசு, பாக்.குடன் தனக்குள்ள விவகாரத்தில் பஞ்சாயத்துச்

**தொடர்ச்சி 9-ஆம் பக்கம்**

**“கிராமப் பாதுகாப்புக் கமிட்டி” என்ற பெயரில் இந்திய இராணுவம் கட்டியமைத்து, பயிற்சி கொடுத்து வரும் கொலைக் குழு.**




படிப்பகம்

www.padippakam.com

# ஆயுதக் கலாச்சாரமும் இந்து முன்னணியும்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரை கிராமமான தேங்காப்பட்டனத்தில், கடந்த மார்ச் 18-ஆம் தேதி குண்டு வெடித்ததில் அசோகன் என்பவர் இறந்து போனார்; இக்குண்டு வெடிப்பு தொடர்பாக அலெக்ஸ், ராஜ்குமார் என்ற இரு நபர்களை போலீசு கைது செய்துள்ளது.

''அசோகன், அலெக்ஸ், ராஜ்குமார் - இம்மூவரும் மீனவர்கள்; கடலில் குண்டு வீசி மீன் பிடிக்க முயன்றபொழுது, எதிர்பாராதவிதமாக அசோகன் கையில் இருந்த குண்டு வெடித்ததால், அவர் இறந்து போனதாக'' போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். தினமலர் உள்ளிட்ட பல்வேறு நாளிதழ்களும், போலீசு கூறியுள்ளபடியே தான் தேங்காப்பட்டனம் குண்டு வெடிப்புச் சம்பவத்தைச் செய்தியாக வெளியிட்டுள்ளன.

ஆனால், தேங்காப்பட்டனத்தில் வாழும் கிறித்தவ மீனவர்களும், முசுலீம் மக்களும் இந்து முன்னணி கும்பல் வெடி குண்டுகளைப் பதுக்கி வைக்க முயலும் பொழுது, எதிர்பாராதவிதமாக குண்டு வெடித்திருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றனர். குண்டு வெடிப்பில் இறந்து போன அசோகனோ, கைது செய்யப்பட்டுள்ள ராஜ்குமாரோ, அலெக்ஸோ - இம்மூவரில் யாருமே மீனவர்கள் இல்லையென்றும், தேங்காப்பட்டனம் பகுதியில் குண்டு வீசி மீன் பிடிக்கும் பழக்கமே இல்லையென்றும் கிறித்தவ மீனவர்கள் கூறுகின்றனர். மேலும், போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ள ராஜ்குமார், தேங்காப்பட்டனத்தைச் சேர்ந்த ராஃபி என்ற முசுலீம் ஒட்டுநரைப் படுகொலை செய்த இந்துமத வெறியன் விஜயனின் தம்பி என்பதால் தான், இக்குண்டு வெடிப்பிற்கும் இந்து முன்னணிக்கும் தொடர்பு இருக்கலாம் எனப் பலமாக நம்புகின்றனர்.

இதே தேங்காப்பட்டனக் கிராமத்தில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் குண்டுகள் கைப்பற்றப்பட்ட பொழுது, முறையான விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே, முசுலீம் தீவிரவாதிகள் மீது பழி போட்டு, தமிழகப் போலீசும், கிசுகிசு பார்ப்பன பத்திரிகைகளும் பயபீதியூட்டின. விசாரணையின் பொழுது, தேங்காப்பட்டனத்திலுள்ள எல்லா முசுலீம்களையும் குற்றவாளிகளாகப் பார்த்தது தமிழகப் போலீசு; சோதனை என்ற பெயரில் அக்கிராமத்திலுள்ள அனைத்து முசுலீம் வீடுகளுக்குள்ளும் அத்துமீறி நுழைந்து அவமானப்படுத்தியது. சபாஹிர் என்ற முசுலீம் இளைஞரை ஆறு குண்டுகளுடன் வளைத்துப் பிடித்ததாக புளுகு மூட்டைகளை அவிழ்த்து விட்டது. குண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதை போலீசிடம் சொன்ன தேங்காப்பட்டனம் ஜமாஅத் நிர்வாகிகளையே குற்றவாளிகளாக்கியது தமிழகப் போலீசு.

சென்ற ஆண்டு தேங்காப்பட்டனத்தில் குண்டுகள் கைப்பற்றப்பட்ட பொழுது, அவை, பா.ஜ.க. எம்.எல்.ஏ. வேலாயுதம் மகளின் திருமணத்திற்கு வரும் பா.ஜ.க. தலைவர்களைக் கொலை செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டவை எனப் புலனாய்வு செய்து எழுதிய பத்திரிகைகள், இப்பொழுது போலீசு தந்துள்ள செய்தியையே வாந்தியெடுத்துள்ளன. யாரோ ஒரு முசுலீம் தீவிரவாதி குண்டு வைத்தால், ஒட்டுமொத்த முசுலீம் மக்களையே குற்றவாளிகளாகக் காட்டத் தயங்காத அரசும், பத்திரிகைகளும், ராஜ்குமார், இந்துமதவெறியன் விஜயனின் தம்பி என்ற விவரத்தைக் கூட வெளியே விடாமல் அமுக்கி விட்டன. எனினும், தென் மாவட்ட முசுலீம் மக்கள் தமிழகப் போலீசின் முசுலீம் விரோத இந்து மத வெறியை அம்பலப்படுத்தி போராடியதையடுத்து, தேங்காப்பட்டனத்தில் நடந்த இவ்விரு குண்டு வெடிப்பு சம்பவங்களைப் பற்றி நீதி விசாரணை செய்ய தி.மு.க. அரசு உத்தரவிட்டுள்ளது.

* * *

கோவை குண்டு வெடிப்புக்கு முன்பு, தமிழகத்தில் எங்கு குண்டு வெடித்தாலும் விடுதலைப் புலி ஆதரவாளர்கள், புரட்சிகர மற்றும் தமிழின அமைப்புகள் மீது பழி போட்டு வந்த தமிழகப் போலீசு, இப்பொழுது, குண்டு வெடிப்புகளுக்கு முசுலீம் மதத் தீவிரவாதிகளை முழுப் பொறுப்பாளியாக்குகிறது. உண்மையில், முசுலீம் தீவிரவாதிகளை விட, தமிழகத்தின் பல்வேறு நகர்ப்புறங்களிலும் இயங்கி வரும் சமூக விரோத ''தாதா'' கும்பல்கள்தான் சர்வ சாதாரணமாக வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி வருகின்றன. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வெடிகுண்டுகள் தயாரிப்பது குடிசைத் தொழிலாகவே மாறிவிட்டது என்பதை தமிழக அரசே பலமுறை ஒப்புக் கொண்டுள்ளது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலி நகரை மையமாக வைத்துச் செயல்பட்டு வந்த கராத்தே செல்வின் என்ற தாதாவை, அவனது எதிர் கோஷ்டி, பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கு அருகிலேயே குண்டு வீசி கொன்றொழித்தது; தூத்துக்குடிக்கு அருகிலுள்ள தருவைக் குளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜன் கோஷ்டி அடியாட்கள் ஆறு பேரை, அதே கிராமத்தைச் சேர்ந்த அம்புரோஸ் கோஷ்டி பெட்ரோல் குண்டுகளை வீசிக் கொன்றொழித்தது. கடத்தல் தொழில் போட்டியும், குடும்பப் பகையும் தான் இப்படுகொலைக்குக் காரணம். 97-ஆம் ஆண்டு கோவில்பட்டி செண்பக வள்ளியம்மன் கோயில் தேரை இழுக்கும் உரிமையை தாழ்த்தப்பட்டவர்கள் கோரியதையடுத்து, நாயுடு சாதி வெறியர்கள் தூண்டிவிட்டு நடத்திய சாதிக் கலவரத்திலும், தென் மாவட்டங்களில் பள்ளர்களுக்கும், தேவர் சாதியினருக்கும் இடையே நடந்த மோதலிலும் வெடிகுண்டுகள் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டன. இப்படி தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சமூக விரோத தாதா கும்பல்கள் மட்டுமின்றி, மேல்சாதி ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்கும், குடும்பப் பகையைத் தீர்த்துக் கொள்ளுவதற்கும் கூட வெடி குண்டுகள் பயன்படுத்தப்பட்டு வருவதை யாரும் மறுத்துவிட முடியாது.

தவிரவும், கடந்த டிசம்பர் 2-ஆம் தேதி தேங்காப்பட்டனம் கிராமத்திற்கு அருகேயுள்ள முஞ்சிறை எனுமிடத்தில், முஞ்சிறை ஒன்றிய இந்து முன்னணித் தலைவர் பொன்னப்பன் 2,000 டெட்டனேட்டர்கள், 1,500 ஜெலட்டின் குச்சிகள், 3,000 பியூஸ் வயர்களைக் கடத்திச் சென்ற

**தமிழகப் போலீசின் முசுலீம் விரோத அடக்குமுறையைக் கண்டித்து தென் மாவட்ட முசுலீம் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

பொழுது, கையும் களவுமாகப் பிடிபட்டார். ஆனாலும், தி.மு.க. அரசு பொன்னப்பனைப் பிடித்த சுவடே தெரியாமல் வெளியே அனுப்பி விட்டது. கோவை சிறைச்சாலையில் முசுலீம் தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் புளுகி, பக்கம்பக்கமாக எழுதிய கிசுகிசு பத்திரிகைகள் பொன்னப்பன் வெடிமருந்துப் பொருட்களுடன் பிடிபட்டதை ஒரு மூலையில் சிறிய செய்தியாக வெளியிட்டு, தங்கள் நடுநிலையைக் காட்டிக் கொண்டன.

ஆயுதங்களைக் கடத்துவதிலும், வெடிகுண்டுகளைப் பதுக்கி வைப்பதிலும் ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணிக் கும்பல் கைத்தேர்ந்தவர்கள் என்பதே உண்மை. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, இராமேஸ்வரம் நகரில் இந்து முன்னணியில் செயல்பட்ட மோகன், மினி பாஸ்கர் என்ற இரு இந்துமத வெறியர்களும், ஆயுதக் கடத்தல் வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டனர். சென்னையில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் வெடித்த குண்டுகள், பிள்ளையார் ஊர்வலத்தின் பொழுது பயன்படுத்துவதற்காக, இந்துமத வெறியர்கள் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் பதுக்கி வைத்தவைதான் எனப் பகிரங்கமாக குற்றஞ் சுமத்தினார், (அப்பொழுது) எதிர்க்கட்சி தலைவராயிருந்த எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்.

பொள்ளாச்சியில் பழனி பாபாவையும், திண்டுக்கல்லில் மௌல்வி காசிமையும் இந்து முன்னணி படுகொலை செய்த சம்பவங்கள்; கோவை, சென்னை, காயல்பட்டினம், உள்ளிட்டு தமிழகத்தின் பல இடங்களில் இந்து முன்னணி நடத்திய மத வெறிக் கலவரங்கள் - இவற்றில் இருந்து ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளலாம். இந்து முன்னணி எங்கெல்லாம் காலை ஊன்றுகிறதோ, அங்கெல்லாம் சமூக விரோதக் கும்பல்களோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்கிறது. இல்லையென்றால், இப்படுகொலைகளையும், இந்து மதவெறிக் கலவரங்களையும் திட்டமிட்ட முறையில் நடத்தவே முடியாது.

மற்ற ஓட்டுக் கட்சிகள், கள்ள ஓட்டுப் போடுவதற்காகவும், கட்சி வருமானத்திற்காகவும் சமூக விரோதக் கும்பல்களைச் சேர்த்துக் கொள்கின்றன. ஆனால், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு, இந்துமதவெறிக் கலவரங்களைத் தூண்டி விட்டு நடத்தும் தனது அரசியலை நடைமுறைப்படுத்துவதற்கே சமூக விரோத கும்பல்களின் உறவு தேவையாய் உள்ளது.

இந்து முன்னணியின் இச்சமூக விரோத பயங்கரவாத நடவடிக்கைகள் அனைத்தையும் மூடிமறைத்து விட்டு பார்ப்பன பத்திரிகைகள் அதனை அகிம்சா வாதிகள் என்றும் சட்டத்திற்கும், தர்ம - நியாயங்களுக்கும் கட்டுப்பட்டு, சமூகப் பொறுப்போடு நடந்து கொள்ளும் தேச பக்தர்கள் என்றும் காட்டுகின்றன. சமூக விரோத தாதா கும்பலுக்கும், தமிழகப் போலீசுக்கும் இருக்கும் கள்ள உறவின் காரணமாகவும், தமிழ்கப் போலீசும் மெல்ல மெல்ல இந்துமயமாகி வருவதனாலும், இந்து முன்னணிக்கும் சமூக விரோத தாதா கும்பலுக்கும் இடையே இருக்கும் நெருக்கத்தையும், அவர்கள் குண்டுகள் தயாரிப்பதையும், கடத்துவதையும் தமிழகப் போலீசு பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. அம்பலமாகும் வழக்குகளில் கூட, பெரும்பாலனவற்றை முசுலீம் தீவிரவாதிகளோடு தொடர்புபடுத்தி முசுலீம்களை ஒடுக்குவதற்கும், பயங்கரவாத பீதியூட்டி தனது மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்கின்றன.

**ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணிக் கும்பல், இந்துமதவெறிக் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்தும் தனது அரசியலை நடைமுறைப்படுத்துவதற்கே, அதற்கு வெடிகுண்டுகளும், ஆயுதங்களும், சமூக விரோதக் கும்பல்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுவதும் அவசியமாய் உள்ளது.**

● செல்வம்

---

**7-ஆம் பக்கத் தொடர்ச்சி**

செய்வதில் அந்நியத் தலையீட்டையும், காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையையும் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. ஆனால், ஜம்மு - காஷ்மீரில் பார்ப்பன பண்டிட்டுகளின் ஆதரவுடன் தன் செல்வாக்கை நிலைநாட்டத் துடிக்கும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஜம்முவின் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளைக் கொண்ட தனி மாநிலத்தை உருவாக்கித் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்ளத் திட்டமிடுகிறது. இதற்கு ஜம்மு நிர்வாகத்தில் இருந்து இசுலாமியர் பெரும்பான்மையாக வாழும் தோடா, ராஜெளரி, பூஞ்சு பகுதிகளை காஷ்மீர் பள்ளத்தாக்கு நிர்வாகத்துடன் இணைப்பதை ஆர்.எஸ்.எஸ். உள்ளூர் தலைவர்கள் ஆதரித்துப் பேசி வருகின்றனர்.

இசுலாமிய மதவாதத்தை ஆதரித்து ஆதாயம் தேட முயலும் தேசிய மாநாட்டுக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும் இதை ஆதரிக்கின்றனர். இப்பகுதிகளை இசுலாமியமயமாக்கும் திட்டத்துடன், இக்கட்சித் தலைவர்கள் இப்பகுதிகளில் அதிக அளவில் நிலவுடைமைச் சொத்துக்களை வாங்கிக் குவிக்கின்றனர். 1998 மார்ச்சில் கராரா பகுதியில் ஆர்.எஸ்.எஸ். கும்பலொன்று நான்கு இசுலாமிய அப்பாவிகளைக் கொன்று போட்டது. இப்படிப்பட்ட ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளால் அங்கே மதவெறிக் கலவரத்தை மூட்டிவிட அவர்கள் முயலுகிறார்கள். இதையே காரணமாக வைத்து தேசிய மாநாட்டுக் கட்சியின் எம்.எல்.ஏக்கள் உட்பட, ஜம்மு பிராந்தியத் தலைவர்கள் இசுலாமிய அடிப்படைவாத ஜமாத் - இ - இசுலாமியுடன் நெருக்கமாக இணைந்து வேலை செய்கின்றனர்.

ஜம்மு - காஷ்மீர் அரச பரம்பரையைச் சேர்ந்தவரும் பா.ஜ.க. ஆதரவாளருமான கரண்சிங், ''ஜம்மு மக்களும் காஷ்மீர் மக்களும் மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றில் வேறு வேறானவர்கள்'' என்று கூறி, மத அடிப்படையிலான மாநில - நிர்வாகப் பிரிவினையை ஆதரிக்கிறார். ஜம்மு பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியரும் ஆர்.எஸ்.எஸ்.காரருமான அரிஓம்; பா.ஜ.க. எம்.பி.யின் சகோதரரும் ஜம்மு முதலாளிகள் - வர்த்தகர்கள் சபைத் தலைவருமான சமன்லால் குப்தா போன்றவர்களும் இந்தப் பிரிவினையை ஆதரிக்கின்றனர்.

பாகிஸ்தானின் நோக்கமும் இது தான். ஜம்மு - காஷ்மீரில் மதச்சார்பற்ற சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தேசிய இன விடுதலை இயக்கத்தை ஒழித்துக் கட்டிவிட்டு, அங்கே இசுலாமிய மத வெறி பயங்கரவாதக் குழுக்களின் ஆதிக்கத்தை நிறுவுவதற்கே அது தொடர்ந்து முயலுகிறது. அக்குழுக்கள் ஜம்முவில் இசுலாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இருந்து இந்து மக்களை விரட்டித் ''தூய்மைப்படுத்தும்'' திட்டத்தோடு அப்பாவி மக்களைப் படுகொலை செய்கின்றன. இந்திய இராணுவமும் இந்து மத வெறியைத் தூண்டி கிரிமினல் - சிவிலியன்களைக் கொண்ட ''கிராமப் பாதுகாப்புக் கமிட்டி'' என்கிற பெயரில் கொலைக் குழுக்களை அமைத்துள்ளது.

இந்திய இராணுவத்துக்கெதிராக காஷ்மீர் விடுதலைப் போராளியோ, பாக். ஆதரவு முசுலீம் தீவிரவாதக் குழுவோ தாக்குதல் தொடுக்கும் ஒவ்வொரு சமயத்திலும் இசுலாமிய சிவிலியன் மக்களை இந்திய இராணுவம் கொலை வெறியோடு தாக்குகிறது. கிரிமினல் - சிவிலியன் கொலைக் கும்பல் பாக். ஆதரவு முசுலீம் தீவிரவாதக் குழு அல்லது விடுதலைப் போராளி குழு உறுப்பினர்களைக் கொல்லும் போதும், முசுலீம் தீவிரவாதக் குழுக்கள் இந்து சிவிலியன்களைப் படுகொலை செய்கிறது. இந்த முடிவற்ற சுழலிலிருந்து காஷ்மீர் விடுபடவே இல்லை. ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் இராணுவப் பயங்கரவாதத்தைத் தொடர்வது தவிர, எந்தவித தீர்வும் இந்திய ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளிடம் கிடையாது. எனவே தான், பிரதமர் வாஜ்பாயி போன்று, காஷ்மீர் நிலவரம் பற்றி எல்லோருமே புளுகுகின்றனர்.

● மாதவன்



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்காவின் மேலாதிக்கவெறி செர்பியாவின் பாசிச இனவெறி

**கொசாவா மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து யுகோஸ்லாவியா மீது நேட்டோ படைகள் நடத்திவரும் போர் நியாயமானதா? அல்லது, நேட்டோ படைகள் மீது எதிர்த் தாக்குதல் நடத்திவரும் யுகோஸ்லாவியா அதிபர் மிலோசெவிச் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியா?**

ஐரோப்பாக் கண்டத்தின் தென் கிழக்கே அமைந்துள்ள இன்றைய யுகோஸ்லாவியா, செர்பியா, மாண்டினிக்ரோ என்ற இரு தேசிய இனங்களின் கூட்டமைப்பாகும். இவ்விரு தேசிய இனங்களும், "ஸ்லாவ்" என்ற ஐரோப்பிய பழங்குடி இனத்தின் ஒரு பிரிவான தெற்கு ஸ்லாவ் இனத்தில் இருந்து பரிணமித்தவை.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் உருவான முதல் செர்பியப் பேரரசு, 1389-ஆம் ஆண்டு கொசோவாவில் நடந்த முதல் கொசோவாப் போரில் துருக்கியின் ஓட்டோமான் பேரரசிடம் தோற்றுப் போனது. அதன்பின், கிட்டதட்ட ஐந்நூறு ஆண்டுகள் செர்பியா, முசுலீம் மதத்தைச் சேர்ந்த ஓட்டோமான் பேரரசிடம் அடிமைப்பட்டுக் கிடந்த பொழுதுதான், முசுலீம் மதத்தைச் சேர்ந்த அல்பேனியர்கள், செர்பியாவின் தென்பகுதியில் இருக்கும் கொசோவாவில் குடியமர்த்தப்பட்டனர்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் செர்பியர்கள் துருக்கி ஆட்சியை விரட்டியடித்தனர். ஓட்டோமான் பேரரசை எதிர்த்த செர்பியர்களின் போராட்டத்திற்கு, ஸ்லாவிய இன அடிப்படையிலும், கிறித்தவ மத அடிப்படையிலும் ரசியா உதவி புரிந்தது. செர்பிய மன்னன் அலெக்சாண்டரின் ஆட்சியில்தான், 1921-இல், தெற்கு ஸ்லாவியர்கள் எனப் பொருள்படும் யுகோஸ்லாவியா என்ற பெயர் செர்பியாவிற்குச் சூட்டப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் பொழுது, ஜெர்மன் நாஜிக்களால் கைப்பற்றப்பட்ட யுகோஸ்லாவியாவை, டிட்டோவின் தலைமையில் இருந்த தேசிய விடுதலை இராணுவம், சோசலிச ரசிய செம்படையின் உதவியுடன் மீட்டது. 1945-இல் குரோசியா, மாசிடோனியா, மாண்டினிக்ரோ, செர்பியா, ஸ்லோவேனியா், போஸ்னியா - ஹெர்செகோவினா ஆகிய ஆறு 'சோசலிச'க் குடியரசுகளையும், செர்பியாவிற்குள் அடங்கிய கொசோவா, வோஜ்வோடினா ஆகிய தன்னாட்சிப் பிராந்தியங்களையும் கொண்ட "யுகோஸ்லாவிய மக்கள் குடியரசுகளின் கூட்டமைப்பு" உருவாக்கப்பட்டது.

1945-இல் உருவாக்கப்பட்ட யுகோஸ்லாவிய மக்கள் குடியரசில் அங்கம் வகித்த ஆறு தேசிய இனங்களும், தெற்கு ஸ்லாவிய பழங்குடியில் இருந்து பரிணமித்தவைதான்; எனினும், செர்பியர்களைப் பொருத்தவரை, தெற்கு ஸ்லாவிய பழங்குடியில் இருந்து தோன்றிய மற்றைய தேசிய இனங்களைவிட தான் உயர்ந்தவன் என்ற இன ஆதிக்க மனோபாவம் அதனிடம் வரலாற்று ரீதியாகவே இருந்து வந்தது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் உருவான முதல் செர்பியப் பேரரசு இன ஆதிக்கத்தோடு, "செர்பியர்கள், கிரேக்கர்கள், அல்பேனியர்கள், பல்கேரியர்"களுக்கான பேரரசாகத் தன்னை அறிவித்துக் கொண்டதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். தெற்கு ஸ்லாவிய பழங்குடிகளிலேயே, செர்பியர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்ததும் இந்த ஆதிக்க மனோபாவத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது; மேலும், ஓட்டோமான் பேரரசிடம் அடிமைபட்டுக் கிடந்ததால், செர்பியர்கள் முசுலீம்களிடம் வெறுப்புக் கொண்டிருந்தனர்.

1980-களின் பின், யுகோஸ்லாவியாவின் போலி கம்யூனிச ஆட்சியாளர்களை எதிர்த்து தேசிய இனப் போராட்டங்கள் வெடித்து எழுந்தன. 1990-களில் குரோசியா, ஸ்லோவேனியா, மாசிடோனியா, போஸ்னியா குடியரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக யுகோஸ்லாவிய மக்கள் குடியரசில் இருந்து வெளியேறின. ஆனாலும், இவ்விடுதலையை அடைய அவை கொடுத்த விலை மிக அதிகம்.

★☆★

போலிக் கம்யூனிஸ்டு கட்சியில் இருந்த பொழுதே, தன்னை செர்பிய இன வெறியனாகக் காட்டிக் கொண்ட மிலோசேவிச், 1989-இல் செர்பிய தேசிய வெறிக் கட்சியான செர்பிய ராடிகல் கட்சியின் துணையோடு செர்பிய அதிபர்ராகப் பதவியேற்றார்; மிலோசேவிச் அதிபர் நாற்காலியில் உட்கார்ந்த மறுநிமிடமே, கொசோவாவிற்கு வழங்கப்பட்டிருந்த சுயாட்சி அதிகாரம் ரத்து செய்யப்பட்டது. சிறுபான்மை அல்பேனிய மக்களின் பண்பாட்டினை அழிக்கும் நோக்கத்தோடு, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அல்பேனிய மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டு வந்த முறை நீக்கப்பட்டு, செர்பிய மொழி திணிக்கப்பட்டது. இம்மொழி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிய நூற்றுக்கணக்கான அல்பேனிய மாணவர்கள் கல்லூரிகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இந்த இனவெறித் தாக்குதல்களுக்கு எதிராக 1989-90 ஆம் ஆண்டுகளில், கொசோவா - அல்பேனிய சுரங்கத் தொழிலாளர்கள் மிகப் பெரும் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். கொசோவாவிற்கு மீண்டும் சுயாட்சி உரிமை கோரி, சுரங்கத் தொழில் நகரான ட்ரெப்காவில் தொடங்கி, முப்பது மைலுக்கு அப்பாலுள்ள கொசோவா தலைநகர் பிரிஸ்டினியாவை நோக்கி நடந்த ஆர்ப்பாட்ட பேரணியில் 17,000 சுரங்கத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். செர்பிய இனவெறி அரசு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துவிட்டு, தொழிலாளர் எழுச்சியை ஒடுக்க முனைந்தது.




1992-ஆம் ஆண்டு கொசோவா ஜனநாயக முன்னணி எனும் அமைப்பு, இப்ராஹிம் ருகோவாவை அதிபராகக் கொண்ட கொசோவா குடியரசை அறிவித்தது. எனினும், இவ்வமைப்பின் மிதவாதத் தலைமையின் காரணமாக, இப்போட்டி அரசு நடைமுறைக்கு வராமல், தோல்வியில் முடிந்தது. 1992 தொடங்கி 1996 வரையிலும், இப்ராஹிம் ருகோவா மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் வழிகாட்டலின் கீழ், சுயாட்சிக்கான பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தாலும், மிலோசேவிச் அல்பேனிய சிறுபான்மையினருக்கு எவ்வித அரசியல் - பண்பாட்டு உரிமைகளையும் தரத் தயாராக இல்லை.

இதன் பின்னர், 1998-இல், கொசோவா விடுதலைப் படை எனும் அமைப்பு, கொசோவா விடுதலையை முன் வைத்து, ஆயுதப் போராட்டத்தைத் துவங்கியது. அவ்வமைப்பு தோன்றிய ஒரே ஆண்டிற்குள், கொசேர்வாவின் முக்கியச் சாலைகளையும், தலைநகர் பிரிஸ்டினியாவிற்கு


படிப்பகம்

www.padippakam.com



**நேட்டோவின் ஏவுகணைத் தாக்குதலால் சிதைந்து போன அலெக்சினாக் என்ற நகரின் குடியிருப்புப் பகுதி.**

அருகிலுள்ள சுரங்கத்தையும், மாலி செலோ, லோட்ஜா ஆகிய பகுதிகளையும் கைப்பற்றியது.

செர்பிய அரசோ, கொசோவா விடுதலைப் படையை அழிப்பது என்ற போர்வையில், ஈழத்தில் நடப்பது போல ஓர் இனவெறி யுத்தத்தையே கட்டவிழ்த்துவிட்டது. கொசோவா விடுதலைப் படை பலமாக இருந்த லோட்ஜா கிராமத்தை ஒட்டிய பகுதிகளின் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. செர்பிய இராணுவம், இத்தாக்குதலின் பொழுது, பீரங்கிகள், கவச வண்டிகள், குண்டு வீச்சு ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தியது. கொசோவா விடுதலைப் படைக்கு ஆதரவான பகுதிகள் எங்கும், மிகப்பெரும் இராணுவத் தாக்குதலும், இனத் தூய்மை நடவடிக்கையும் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதையெடுத்துதான், 600 ஆண்டுகளாக கொசோவாவில் வாழ்ந்து வரும் அல்பேனியச் சிறுபான்மையினர், கிராமங்களையும், நகரங்களையும் விட்டு வெளியேறி, கொசோவாவை ஒட்டியுள்ள அல்பேனியாவிலும், மாசிடோனியாவிலும் அகதிகளாகத் தஞ்சமடையத் தொடங்கினர்.

★☆★

**ஸ்**லாவிய இன அடிப்படையில் யுகோஸ்லாவிய மக்கள் குடியரசில் இணைந்திருந்த தேசிய இனங்கள், செர்பிய இனவெறி ஆதிக்கத்தை எதிர்த்தும், தங்கள் விடுதலைக்காகவும் போராடத் தொடங்கியவுடனேயே, மேற்குலக ஏகாதிபத்தியங்கள் அவ்விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கத் துவங்கின. ஜெர்மனி ஏகாதிபத்தியம், இரண்டாம் உலகப் போரின் பொழுது, ஜெர்மனி நாஜிக்களை ஆதரித்த குரோசியா மற்றும் ஸ்லோவேனியாவின் விடுதலைப் போராட்டங்களுக்கு உதவியதன் மூலம், ஜெர்மனி நாஜிக்களை எதிர்த்த செர்பியர்களைப் பழி தீர்த்துக் கொண்டது. போஸ்னிய முசுலீம்களைக் காப்பது என்ற போர்வையில் போஸ்னியாவில் உள்ளே நுழைந்த நேட்டோ படைகள், அந்நாட்டை குரோசியர்களும், செர்பியர்களும் துண்டாடுவதற்குத் துணை போனது.


துருக்கியில் குர்தீஷ்; கனடாவில் க்யூபெக்; மேற்கு ஐரோப்பாவில் வட அயர்லாந்து - இத்தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தர மறுத்து, ஒடுக்கி வரும் ஏகாதிபத்தியங்கள், யுகோஸ்லாவியாவில் இணைந்திருந்த தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு மட்டும் ஆதரவளிப்பதற்கு மனிதாபிமான நோக்கம் எதுவும் கிடையாது. இவ்விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம், யுகோஸ்லாவியா அமைந்துள்ள பால்கன் பகுதியில் தங்களது மேலாதிக்கத்தை இறுக்கிக் கொள்ள முயலும் நரித்தனம்தான் இதன் காரணம்.

கொசோவா, தங்கம், வெள்ளி, துத்தநாகம், ஈயம், காட்மியம் போன்ற மூலவளங்கள் நிறைந்த பகுதி. இரண்டாவதாக, கொசோவாவின் கிழக்குப் பகுதியில் உள்ள காஸ்பியன் கடல் பகுதியில் கொட்டிக் கிடக்கும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வளத்தைக் கொள்ளையடிப்பதில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்கும், ரசியாவிற்கும் இடையே வர்த்தகப் போரே நடந்து வருகிறது. காஸ்பியன் கடலை எல்லையாகக் கொண்டுள்ள துருக்மேனிஸ்தான், கஜகஸ்தான் நாடுகளோடு தனக்கிருக்கும் பழைய உறவின் அடிப்படையில், ரசியா, காஸ்பியன் கடல் பகுதியில் தனக்கிருந்துவரும் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள முயலுகிறது. மேற்குலக ஏகாதிபத்தியங்களோ, காஸ்பியன் கடல் பகுதியில் கிடைக்கும் எண்ணெயை எடுத்துச் செல்ல ரசியா ஏற்கனவே அமைத்துள்ள குழாய்களுக்குப் பதிலாக, புதிய குழாய்களை அமைத்து, காஸ்பியன் கடல் பகுதியில் ரசியாவின் பொருளாதார ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வர முயன்று வருகின்றன. இதற்காக, முன்னாள் சோவியத் நாடுகளான துருக்மேனிஸ்தான், கஜகஸ்தான் நாடுகளோடு ஒப்பந்தங்களை இட்டுள்ளன. மூன்றாவதாக, யுகோஸ்லாவியா அமைந்துள்ள பால்கன் பிராந்தியத்திற்கு அருகாமையில்தான் மேற்காசியாவும் அமைந்துள்ளது.

எண்ணெய் வளமிக்க மத்திய ஆசியா மற்றும் மேற்காசிய நாடுகளை, தங்களது நிரந்தர கட்டுப்பாடு, கண்காணிப்பின் கீழ் வைத்துக் கொள்வதற்கு, ஏகாதிபத்தியங்கள் பால்கன் பிராந்தியத்தை நேட்டோ இராணுவத் தளமாக மாற்ற முயலுகின்றன. இதனால்தான், யுகோஸ்லாவியா மீது அமெரிக்கா திணிக்க முயன்ற பாரீசு ஒப்பந்தத்தில், கொசோவாவின் சுயாட்சியோடு, கொசோவாவில் 'நேட்டோ' படைகளை நிறுத்திக் கொள்ளும் விதிகளையும் இணைத்திருந்தன. கொசோவாவில் நுழைந்துள்ள செர்பிய இராணுவத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, அங்கு நேட்டோ படைகளை நிறுத்த மிலோசேவிச் மறுத்து வருவதால்தான், ''நேட்டோ'' நாடுகள் யுகோஸ்லாவியாவைத் தொடர்ந்து தீவிரமாகத் தாக்கி வருகின்றன.

விமானங்களில் இருந்து குண்டுகளையும், ஏவுகணைகளையும் வீசி, சிவிலியன்

**புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனப் பொருள் தூவப்பட்ட டான்யூப் நதி: நேட்டோவின் மனிதாபிமானத்தின் இலட்சணம்.**





படிப்பகம்

www.padippakam.com

இலக்குகளைத் தாக்கி அழிப்பதன் மூலம், மக்களை அவதிக்குள்ளாக்கி, அவர்களை தங்களின் சொந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகத் திருப்பிவிடும் இராணுவ - அரசியல் உத்தியினைதான் ஏகாதிபத்தியங்கள் யுகோஸ்லாவியாவிலும் கையாளுகின்றன. யுகோஸ்லாவியாவில் பாயும் நதியான பான்யூப் மீது கட்டப்பட்டுள்ள எந்தவொரு பாலத்தையும் ''நேட்டோ'' விமானங்கள் விட்டு வைக்காமல் தாக்கி அழித்து, பொருள் போக்குவரத்தை முடக்கிவிட்டன. மேலும், இந்த நதியின் மீது புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பொருட்களைத் தூவி, இந்த நதியினைப் பயனற்றதாக்கிவிட்டன. கொசோவாவின் தலைநகர் பிரிஸ்டினியா, செர்பியத் தலைநகர் பெல்கிரேடு மற்றும் நோவிசாட் உள்ளிட்ட பல நகரங்க்ளின் மீது நடத்தப்பட்ட ஏவுகணை - குண்டுவீச்சுத் தாக்குதலில், அல்பேனியர்களையும் உள்ளிட்டு 300-க்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்து போயினர்; மேலும், குறைந்த அளவு அணுக்கதிர் வீச்சு கொண்ட யுரேனியம் குண்டுகளை வீசியும், எண்ணெய் கிடங்குகள், இரசாயனத் தொழிற்சாலைகளைத் தாக்கி அழித்தும் சுற்றுச்சூழலையும், மக்களின் உடல் நலத்தையும் ஏகாதிபத்தியங்கள் நாசப்படுத்தி வருகின்றன. ஏகாதிபத்தியங்கள் கையாளும் இந்த இராணுவ உத்தி எத்தகைய பேரழிவை ஏற்படுத்தும் என்பதற்கு சாட்சியாக ஏற்கனவே வியட்நாமும், ஈராக்கும் உள்ளன. இனி, யுகோஸ்லாவியாவையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

இத்துணைக்குப் பிறகும் கிளிண்டனின் போர் வெறி அடங்கவில்லை. ''நேட்டோ''வின் தரைப்படையை யுகோஸ்லாவியாவினுள் இறக்கிவிடத் தருணம் பார்த்தக் கொண்டிருக்கும் கிளிண்டன், போர்ச் செலவுகளுக்காக மேலும் 400 கோடி டாலரை (16,000 கோடி ரூபாய்) ஒதுக்கித் தருமாறு அமெரிக்கக் காங்கிரசிடம் கோரியுள்ளார். தான் உருவாக்கிய பாரீசு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியே தீருவது என உடும்புப் பிடியாக நிற்கிறது அமெரிக்கா. மேலும், நேட்டோ நாடுகளுள் ஒன்றான ஜெர்மனியின் அமைதித் திட்டத்தையும் அமெரிக்கா நிராகரித்ததன் மூலம், தனது ஒற்றைத் துருவ மேலாண்மையை யாருக்காகவும் விட்டுக் கொடுப்பதில்லை என்றும் காட்டிக் கொண்டுவிட்டது.

★☆★

ரசியா, யுகோஸ்லாவியாவின் மீதான ''நேட்டோ''வின் தாக்குதலைக் கண்டிப்பதற்கும், யுகோஸ்லாவியாவிற்கு இராணுவ உதவி செய்யப் போவதாக மிரட்டுவதற்கும், செர்பியர்களும், ரசியர்களும் ஸ்லாவிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மட்டும் காரணமல்ல. ரசியா பொருளாதார ரீதியாக குப்புற விழுந்து கிடந்தாலும், இராணுவ ரீதியில் இன்றளவும் பலம் வாய்ந்த நாடாகவே உள்ளது. அமெரிக்காவுக்கு இணையாகவே ரசியாவிடம் அணு ஆயுதங்களும், ஏவுகணைகளும் குவிந்து கிடக்கின்றன. மேலும், மேற்குலகை எதிர்க்கும் அரசியல் சக்திகள் - முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி, ஜிரினோவ்ஸ்கியின் தலைமையில் உள்ள ரசிய தேசியவாதக் கட்சி போன்றவை டூமாவில் பலமாக உள்ளன. இதன் காரணமாக, நேட்டோ நாடுகள் ரசியாவை இன்னும் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கின்றன.

எனவேதான், ஐரோப்பாவில் ரசியாவின் அரசியல் ஆதிக்கத்தை வீழ்த்தும் உத்தியாக சோவியத் ரசியா உள்ளிட்டு, முன்னாள் போலி சோசலிச நாடுகள் தேசிய இனரீதியாகப் பிளவுண்டு, தனித்தனி நாடுகளாக உருவாவதை ஆதரிக்கின்றன. சோவியத் ரசியாவின் சிதைவுக்குப் பின் வார்சா ஒப்பந்தம் காலாவதியாகிப் போனாலும் கூட, நேட்டோவைக் கலைத்து விடாமல், அதை விரிவாக்கிக் கொண்டு வருகின்றன. சமீபத்தில், முன்னாள் போலி சோசலிச நாடுகளான போலந்து, ஹங்கேரி, செக். ஆகிய மூன்று நாடுகளும் நேட்டோ கூட்டமைப்பில் இணைந்தன.

சோவியத் ரசியா சிதைவுண்டபொழுது, ரசியா தனது அரசியல் - இராணுவ மேலாண்மையைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்காக, முன்னாள் சோவியத் ரசியாவின் உறுப்பு நாடுகளை இணைத்துக் கொண்டு ஒரு கூட்டமைப்பை உருவாக்கியது. அதில் அங்கம் வகித்த அஜர்பெய்ஜான், கஜகஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், ஜார்ஜியா ஆகிய நாடுகள் நேட்டோ பக்கம் சாயத் தொடங்கிவிட்டன.



நேட்டோ மற்றும் செர்பிய இனவெறி இராணுவங்களின் தாக்குதலில் இருந்து தப்பித்து, தனது குழந்தையோடு துருக்கிக்கு அகதியாய்ச் செல்லும் அல்பேனியர்.

பொருளாதார ரீதியாகச் சரிந்து கிடக்கும் ரசியாவை நேட்டோ நாடுகள் இராணுவ ரீதியாக இப்படிச் சுற்றி வளைத்து வருகின்றன. இதை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ள ரசியா, அமெரிக்காவை எதிர்க்கும் யுகோஸ்லாவியாவை ஆதரிப்பதில் வியப்பேதும் இருக்க முடியாது. மேலும், யுகோஸ்லாவியாவில் தாக்குதல் தொடுத்துவரும் நேட்டோ படைகளை மிரட்டும் வகையில் ரசியா, தனது போர்க் கப்பல்களை யுகோஸ்லாவியாவுக்கு அருகே அமைந்துள்ள மத்திய தரைக்கடல் பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது; ஐரோப்பாவில் உள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவக் கூட்டணிக்குப் போட்டியாக, ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த யுகோஸ்லாவியா, பைலோரசியா, ரசியா ஆகிய மூன்று நாடுகள் அடங்கிய எதிர்க் கூட்டணியைக் கட்டவும் தீவிரமாக முயன்று வருகிறது. இவையாவும், ஐரோப்பாவைக் கூறு போட்டுக் கொள்வதில் அமெரிக்கா, ரசியா மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையேயான நாய்ச் சண்டை மீண்டும் தீவிரமடைந்து வருவதைத்தான் காட்டுகின்றன.

பெரும்பாலான ஏழை நாடுகள் யுகோஸ்லாவியாவின் மீதான நேட்டோவின் தாக்குதலைக் கண்டித்தாலும், அவை செர்பிய தேசிய இனவெறி பற்றியோ, கொசோவாவில் அல்பேனியச் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமை பற்றியோ வாய் திறப்பதில்லை. அமெரிக்காவில் நடந்த பொன்விழாக் கூட்டத்தில், ''பிராந்திய பிரச்சினைகளில் நேட்டோ தலையிடும்'' என மேற்குலக ஏகாதிபத்தியங்கள் முடிவெடுத்துள்ளன. இதனால், காசுமீர் பிரச்சினையைக் காட்டி இந்தியாவிலும், திபெத் பிரச்சினையைக் காட்டி சீனாவிலும், இது போன்று ஏனைய நாடுகளிலும் மேற்குலக ஏகாதிபத்தியங்கள் மூக்கை நுழைத்து நாட்டாமை செய்யக் கிளம்பிவிடும் என்ற சுயநல அச்சத்தின் காரணமாகதான் அவை நேட்டோ தாக்குதலை வாயளவிலாவது எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுவிட்டன. அதே சமயம், யுகோஸ்லாவியாவில் இருந்த கொசோவா பிரிந்து போவதையோ, அல்லது கொசோவாவிற்குத் தன்னாட்சி வழங்க வேண்டும் என்பதையோ ஆதரித்தால், தங்களின் 'தேச ஒருமை'ப்பாடே மோசம் போய்விடும் என்பதால், இந்தியா, சீனா போன்ற நாடுகள் அல்பேனியச் சிறுபான்மையினரின் அவலம் பற்றிக் கண்ணீர் விடுவததோடு நிறுத்திக் கொள்கின்றன.

★☆★



படிப்பகம்

www.padippakam.com

யுகோஸ்லாவியா, "நேட்டோ" கூட்டணியை எதிர்த்து தொடுத்துவரும் போர், ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதல்ல. அல்பேனியச் சிறுபான்மையினர் மீதான செர்பிய இன ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க மாட்டோம் எனும் அடிப்படையில்தான், மிலோசேவிச் தலைமையில் செர்பிய இன வெறியர்கள் நேட்டோ கூட்டணியை எதிர்த்து நிற்கின்றனர். எனவே, மிலோசேவிச்சின் "ஏகாதிபத்திய எதிர்ப்பில்" முழுமையான நியாயம் இருப்பதாக, புரட்சியாளர்கள் கருதுவதற்கு இடமில்லை.

நேட்டோ தாக்குதல் தொடுத்தபின் மிலோசேவிச், அல்பேனியச் சிறுபான்மையினருக்குத் தன்னாட்சிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டாலும், செர்பிய இன வெறியர்கள் இவ்விசயத்தில் வாக்குத் தவறாமல் நேர்மையாக நடந்து கொள்வார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனென்றால், போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் வழங்கப்பட்டிருந்த தன்னாட்சியைப் பறித்தவர்களே இந்த மிலோசேவிச் கும்பல்தான்.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தன்னாட்சி உரிமையும் பறிக்கப்பட்டு, நாட்டின் ஐக்கியம் எனும் பெயரில் செர்பியப் பாட்டாளி வர்க்கமும் இன வெறியூட்டப்பட்டு, சட்டத்திற்கு உட்பட்டு தன்னாட்சி உரிமை பெற அல்பேனியச் சிறுபான்மையினர் நடத்திய போராட்டங்களும் செர்பிய இனவெறியர்களால் ஒடுக்கப்பட்ட பின்னர்தான், கொசோவா விடுதலைப் படை, யுகோஸ்லாவியாவில் இருந்து கொசோவா பிரிந்து செல்வதை முன் வைத்தது. ஏகாதிபத்தியங்கள் இக்கோரிக்கையை ஆதரிப்பதனாலேயே, அல்பேனியச் சிறுபான்மை மக்களுக்கு பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமையை மறுப்பது நியாயமாகாது மிலோசேவிச் நேட்டோவை எதிர்த்துக் கொண்டிருக்கிறார் என்பதனாலேயே, செர்பிய இனவெறியை தாக்குதல் இலக்கில் வைக்கக் கூடாது என்பது பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டமாகாது.

ஒரே சமயத்தில் இவ்விரண்டு எதிரிகளையும் எதிர்த்துப் போராடுவதுதான் யுகோஸ்லாவியப் பாட்டாளி வர்க்கத்தினதும், அனைத்துலகப் புரட்சியாளர்களினது கடமையாகும். குறிப்பாக, நேட்டோ தாக்குதலை எதிர்க்கும் செர்பிய இன மக்கள், அல்பேனியச் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஆதரித்தும், செர்பிய இனவெறி பிடித்த மிலோசேவிச் கும்பலை எதிர்த்தும் போராட முன்வர வேண்டும். இல்லையென்றால், நாடு பிளவுபடுவதையோ, அல்பேனியச் சிறுபான்மையினர் பிரச்சினையை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்திக் கொண்டு மேலாதிக்கம் செய்வதையோ தடுக்க முடியாது! ●ரஹீம்

# டி.வி.எஸ். நிர்வாகத்தின் காட்டு தர்பார்

டி.வி.எஸ். - குரூப் நிறுவனங்களில் தொழிலாளர்களது தொழிற்சங்க உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. சுதந்திரமான ஒரு தொழிற்சங்கத்தை நிறுவ முயன்ற அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களும் டி.வி.எஸ். நிர்வாகத்தால் பழி வாங்கப்பட்டுள்ளனர். அவர்கள் பின்னால் அணி வகுத்து நின்ற ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மறைந்த வலது கம்யூனிஸ்ட் தலைவரான கே.டி.கே. தங்கமணி 1948-இல் ஒரு தொழிற்சங்கத்தை டி.வி.எஸ்.-இல் நிறுவினார். அதைத் தொடர்ந்து அச்சங்கத்தை ஆதரித்த 1800-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஒரே நாளில் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். தொழிற்சங்கத் தலைவர் தங்கமணி மீது பொய்வழக்கு தொடரப்பட்டு சிறையிடப்பட்டார். அதன் பின்னர் டி.வி.எஸ். நிர்வாகமே ஐ.என்.டி.யு.சி. சங்கத்தை நிறுவி தொழிற்சங்க உரிமையை நிலைநாட்டிவிட்டதாக நாடகமாடியது. அன்று முதல் நிர்வாகத்தின் கைப்பாவையாகவும், புதிய தொழிற்சங்கத்தை நிறுவ முயலும் தொழிலாளிகளை நிர்வாகத்துக்குக் காட்டிக் கொடுக்கும் கருங்காலி அமைப்பாகவும் ஐ.என்.டி.யு.சி. செயல்பட்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், 1998-ஆம் ஆண்டு டி.வி.எஸ். சதர்ன் ரோடுவேஸ், சுந்தரம் மோட்டார்ஸ், சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் ஆகியவற்றில் சுதந்திர தொழிற்சங்கங்களை தொழிலாளர்கள் முன் முயற்சியுடன் நிறுவி, இச்சங்கங்களை இணைத்து டி.வி.எஸ். எம்ப்ளாயீஸ் பெடரேஷன் என்ற கூட்டமைப்பையும் ஏற்படுத்தினர். கடந்த 11 ஆண்டுகளாக இச்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் சம்பளப் பாகுபாடு, இடமாற்றம், வேலைநீக்கம் - என பல வகையிலும் தொடர்ந்து பழிவாங்கப்பட்டு வருகின்றன. இத்தொழிற்சங்கத்தை நசுக்க அனைத்து வழிகளிலும் டி.வி.எஸ். நிர்வாகம் முயற்சித்த போதிலும், தொழிலாளர்களின் உறுதியான வர்க்க ஒற்றுமை காரணமாக அது வெற்றி பெறவில்லை.

கடந்த மார்ச் 8-ந் தேதியன்று, வேலைப்பளு சம்பந்தமாக தொழிற் தகராறு சமரச அலுவலர் முன்பான பேச்சு வார்த்தை நிலுவையில் இருக்கும்போதே, டி.வி.எஸ். நிர்வாகம் அநியாயமாக மீண்டும் வேலைப் பளுவை அதிகரித்து உத்திரவிட்டது. இந்த உத்தரவை ஏற்க மறுத்த மதுரையிலுள்ள டி.வி.எஸ். ரப்பர் ஆலையின் தொழிற்சங்க முன்னோடிகள் 13 பேரை நிர்வாகம் சட்ட விரோதமாக தற்காலிகப் பணிநீக்கம் செய்தது. இக்கொடுஞ் செயலைக் கண்டித்து 9.3.99 முதல் தொழிலாளர்கள் ஆலைவாயிலின் முன்பாக "தர்ணா" போராட்டத்தை தொடர்ந்து நடத்தினர். நிர்வாகத்தின் அச்சுறுத்தல் - அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் நடந்த இப்போராட்டத்தைத் தொடர்ந்து, கடந்த 7.4.99 முதல் பழிவாங்கப்பட்ட 13 தொழிலாளர்களை நிர்வாகம் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டது.

தொழிலாளர் நல அலுவலர் முன்பாக நடத்த பேச்சு வார்த்தை முடிவுகளின்படி, இத்தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொண்ட நிர்வாகம்,அடுத்த இரு நாட்களிலேயே தனது கோர முகத்தைக் காட்டியது. வேலையில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களில் பலரை மீண்டும் தற்காலிக பணி நீக்கம் செய்வதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்களின்படி இச்செயல்கள் அனைத்துமே தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆனாலும் தொழிலாளர் நலத்துறையோ, அரசாங்கமோ, நீதிமன்றமோ டி.வி.எஸ். நிர்வாகத்தின் அடாவடித்தனங்களுக்கு எதிராக இது வரை எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை.

தொழிற்சங்கம் அமைத்த 'குற்றத்'திற்காக முன்னோடிகளைப் பழிவாங்கும் டி.வி.எஸ். நிர்வாகத்தின் அடக்குமுறை - அடாவடித்தனங்களை எதிர்த்தும், சட்டவிரோத வேலை நீக்க உத்தரவை ரத்து செய்யக் கோரியும் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். டி.வி.எஸ். நிர்வாகத்தின் அடக்குமுறைகளை அம்பலப்படுத்தியும் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்தும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் சுவரொட்டிப் பிரச்சாரத்தை நடத்தியுள்ளனர்.

தகவல்: பு.மா.இ.மு.,
மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

# மருத்துவர் போராட்டம் நியாயமானதா?

**தவறான மருத்துவச் சிகிச்சையினால் நேரிடும் உயிரிழப்பு / உடல் ஊனத்திற்காகத் தொடுக்கப்படும் குற்ற வழக்குகளை எதிர்க்கும் மருத்துவர்களின் போராட்டம் தவறான முன்னுதாரணமாகும்!**

மருத்துவர்கள், குறிப்பாக அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் மனிதச் சமுதாயத்துக்கு ஆற்றும் நற்பணி அளப்பரியது. அதற்குரிய மதிப்பு - மரியாதையோடுதான் மருத்துவர்களைச் சமுதாயம் பார்க்கிறது. எவ்வளவோ மனித உயிர்களைச் சாவின் பிடியிலிருந்து காத்து விடுகிறார்கள், மருத்துவர்கள். அதனாலேயே கடவுளுக்கு இணையாக வைத்து மருத்துவர்களை சமுதாயத்தில் பலரும் மதிக்கின்றனர். அதேசமயம் சில மனித உயிர்கள் பறிபோவதற்கு மருத்தவர்கள்தான் காரணம் என்று கருதி, அதற்கான ஆதாரங்களும் முன்வைக்கப்படும்போது என்ன செய்வது? அதாவது சிகிச்சையளிக்கும்போது மருத்துவர்கள் செய்துவிடும் தவறுகளால் ஊனமுறுவது முதல் உயிரிழப்புவரை பாதிப்பு ஏற்படும்போது அதற்கான பொறுப்பேற்கச் சொல்லி, நடந்தது கிரிமினல் கவனக்குறைவு என்று நிரூபிக்கப்படும்போது என்ன செய்வது?

கடந்த மாதம், தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பணிபுரியும் மருத்தவர்கள், அறுவைச் சிகிச்சைப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தியபோது இப்பிரச்சினை மீண்டும் முன்னுக்கு வந்தது.

1995-ஆம் ஆண்டு, சிதம்பரம் அரசு மருத்துவமனையில், இராணி என்கிற பெண்ணுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்தபோது அவர் இறந்துவிட்டார். இறந்தவரின் தந்தை கொடுத்த புகாரின் பேரில் விசாரணை நடத்திய போலீசு, அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர் உமாகாந்தன் மீது கிரிமினல் குற்ற வழக்குத் தாக்கல் செய்தது. போலீசு விசாரணையின்போது சக மருத்துவர்கள் கொடுத்த வாக்குமூலம், வழக்குமன்ற விசாரணையின்போது பிற மருத்துவ நிபுணர்கள் அளித்த சாட்சியங்கள் - கருத்துக்கள் அடிப்படையில், கிரிமினல் குற்றப்பிரிவு 304-இன் கீழ் சிதம்பரம் வழக்கு மன்றத்தில் மருத்துவர் உமாகாந்தனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதோடு இறந்தவர் குடும்பத்துக்கு மூன்று இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கும்படியாக உத்திரவிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட மருத்துவர் உமாகாந்தன் சிறையிலடைக்கப்படவில்லை. கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் தங்க வைக்கப்பட்டார். இதையொட்டி, தமிழ்நாடு மருத்துவர்கள் சங்கம் மாநிலந்தழுவிய வேலை நிறுத்தத்தில் குதித்தனர். அரசு மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை புறக்கணிப்புப் போராட்டமும் நடத்தினர். ''சட்டப்படி நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக அரசு ஒன்றும் செய்ய முடியாது; சட்டப்படியே மேல் முறையீடு செய்வதுதான் முறையாகும்; நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகப் போராடுவது நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகும்; மருத்துவர்கள் தொடர்ந்து போராடினால் புதிய மருத்தவர்களை நியமிப்போம்'' என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி நியாயவாதமும் மிரட்டலுமாக சமாளிக்க முயன்றார்.

ஆனால் ஐந்தே நாட்களில் மருத்துவர் உமாகாந்தன் பிணையில் விடப்பட்டு, மருத்துவர்கள் போராட்டமும் விலக்கிக் கொள்ளப்பட்டது. இது குறித்து மருத்துவர்கள் சங்கத் தலைவர் அளித்த பேட்டியிலிருந்து, அவர்களுடைய கோரிக்கையை தமிழக அரசு ஏற்றுக் கொண்டு விட்டதாகவே தெரிகிறது. மருத்துவரை பிணையில் விடும் மனுவை அரசுத் தரப்பு எதிர்க்கவில்லை என்பதோடு, அதற்குத் தேவையான மூன்று இலட்சம் ரூபாய் மருத்துவர்கள் சங்கமும் அரசமே ஏற்பாடு செய்துள்ளன.

✱ குறிப்பிட்ட வழக்கில், மருத்துவர்கள் மேற்கொள்ளும் மேல் முறையீட்டு நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உதவுவதாக உறுதியளித்துள்ளது.

✱ தொழில் ரீதியாக மருத்துவர்களுக்குப் பிரச்சினை ஏற்படும்போது குற்றவியல் பிரிவில் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று அரசு உறுதியளித்துள்ளது.


✱ இனிவரும் காலங்களில், மருத்துவர்கள் மீது குற்றம் சுமத்தப்படும்போது ஓய்வுபெற்ற உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி தலைமையில் அமைக்கப்படும் குழு மூன்றுமாத காலம் விசாரணை நடத்தி அரசிடம் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற மருத்துவர்கள் சங்கக் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது.

முதல் முறையாக மருத்துவருக்கு தண்டனை வழங்கிய இந்த வழக்கை முன்னுதாரணமாக கொண்டு மற்ற மாநிலங்களிலும் நடக்கக் கூடாது என்பதற்காகவே போராட்டம் நடத்தியதாக சங்கத் தலைவர் கூறியுள்ளார். இதன் மூலம் மருத்துவர்கள் சங்கம் இன்னொரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவர்கள் எல்லா சட்ட நியாயங்களுக்கும் மேலானவர்கள்; கிரிமினல் குற்ற வழக்கில் தண்டனை பெற்றவர்களையும் இப்படிப்பட்ட போராட்டம் - நிர்பந்தம் மூலம் விடுவிக்க முடியும் என்பதுதான் அந்த முன்னுதாரணம்.

தவறான மருத்துவச் சிகிச்சையளித்து, நோயாளியின் உயிரிழப்புக்கும், உடல் ஊனத்துக்கும் காரணமான மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளை எல்லாம் அவர்கள் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறார்கள். தவறான சிகிச்சை காரணமாக கடந்த ஆண்டு ஒரு பொறியியல் மாணவன் இறந்துபோன விவகாரத்தில், விசாரணைக்காக சம்பந்தப்பட்ட மருத்துவர் போலீசு நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டதாகச் சொல்லி போராட்டத்தில் குதிப்பதாக மருத்துவர்கள் சங்கம் அறிவித்தது. அதன்பிறகு, இனி மருத்துவர்கள் மீது குற்ற வழக்குகள் தொடுப்பதில்லை என்று அரசு வாக்குறுதியளித்தது. அப்போது நடந்த விவாதத்திலேயே தவறான மருத்துவ சிகிச்சையின்போது பாதிப்பு ஏற்பட்டால் அதை மருத்துவர்களே அடங்கிய குழுதான் விசாரிக்க வேண்டும்; வேறு எவரும் விசாரிக்கக் கூடாது என்று மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்தியது.

அப்போலோ மருத்துவமனையில் தவறான சிகிச்சை காரணமாக இந்திய ''டேபிள் டென்னிஸ் சாம்பியன்'' சந்திரசேகரின் உடல் செயலிழந்து போனது. அவர் பல ஆண்டுகள் வழக்காடி பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் நட்ட ஈடு பெற்

மருத்துவர்களின் போராட்ட மிரட்டலால் பிணையில் விடப்பட்ட மருத்துவர் உமாகாந்தன். (நடுவில்)






படிப்பகம்

www.padippakam.com

றார். வெளிநாடு போய் சிகிச்சை பெற்று ஓரளவு குணமடைந்தார். அதே மருத்துவ மனையில் நடிகை விஜிக்குத் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டு உடல் செயலி ழந்து போனது. முதலமைச்சர் பஞ்சாயத்து செய்து நட்டஈடு பெற்றுத் தந்தார். வேறு மருத்துவமனையில் செருமனி மருத்துவர் சிகிச்சை அளிக்க ஓரளவு குணமடைந்தார். இரண்டு வழக்குகளிலும் மருத்துவர்கள் தமது தவறுகளை நியாயப்படுத்தி, மூடிம றைக்கவே முயன்றனர்.

சமீபத்தில் நடந்த ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சியின் போது, மும்பையைச் சேர்ந்த காங்கிரசுப் பிரமுகர் சொன்னார்: அவரது சிறுவயது மகன் மருத்துவர்களின் தவறான சிகிச்சையினால் இறந்து போனான். ஆனால் அதை மூடிமறைத்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து அவ னுக்கு மருத்துவம் செய்து வருவதாக மருத் துவர்கள் புளுகினர். பிறகுதான் தெரிந்தது, அவன் இறந்து போய் நான்கு நாட்கள் ஆகி விட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட மருத்துவர் கள் மீது தொடுக்குப்பட்ட வழக்கு பத்தாண் டுகள் ஆகியும், அடுத்தடுத்த பிரதமர்கள் வரை முறையிட்டும் இன்னமும் முடிய வில்லை.

நாடு முழுவதும் இப்படிப் பல எடுத் துக்காட்டுகள் கூற முடியும். இது பொது விதியில்லை என்றாலும், இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பதில்லை என்று அடி யோடு மறுத்துவிட முடியாது. பாதிக்கப் பட்டவர்களில் வசதியானவர்கள், விவர மானவர்களாக இருந்தால்தான் வெளியில் வருகிறது. கல்வியறிவில்லாத, ஏழை பாழைகள் சிகிச்சையின் தன்மையை அறி வார்களா? அறிந்தாலும் எங்கே போய் முறையிடுவார்கள்?

சமுதாயத்துக்கு உயிராதாரமான பணியாற்றும் மருத்துவர்களை நுகர்வோர் வழக்குமன்றங்களில் நிறுத்தலாமா என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. இதையும் எல்லா மருத்துவர்களும் கடுமையாக எதிர்க்கின்றனர். கிரிமினல் குற்ற வழக்கோ சிவில் அல்லது நுகர்வோர் சட்டப்படி வழக்கோ எதுவும் கூடாது; மருத்துவம் பற்றி மற்ற எவரும் விசாரிக்கக் கூடாது; மருத்துவர்களை மட்டுமே கொண்ட குழு தான் விசாரிக்க வேண்டும் என்கின்றனர். ''நல்ல எண்ணத்துடன் மேற்கொள்ளப்ப டும் நடவடிக்கையினால் பாதிப்பு ஏற்பட் டால் அந்நடவடிக்கை குற்றமாகாது'' என் கிற ''இயற்கை நியதி''யை தமக்கு பாது காப்புக்கான தார்மீக ஆயுதமாக மருத்து வர்கள் ஏந்தியுள்ளனர்.

பெரும்பாலான மருத்துவர்கள் வேண்டுமென்றே தவறான மருத்துவச் சிகிச்சை அளிப்பதில்லை; திட்டமிட்ட கவ னக்குறைவு - அலட்சியம் புரிபவர்கள் இல்லை என்பது உண்மைதான் என்றாலும் கணிசமான மருத்துவர்கள் கிரிமினல் கவ னக்குறைவு அல்லது நட்டஈடு கட்ட வேண் டிய அளவு அலட்சியத்துடன் பணிபுரிகி

**அரசு மருத்துவர்கள் அனைவருமே பொறுப்பு ணர்ச்சியுடன் தான் நடந்து கொள்கிறார்களா? ''ஆம்'' என்றால், இனி, போலீசுக் கொட்டடிகளில் நடக்கும் கொலைகள், பாலியல் வல்லுறவுகள் குறித்த மருத்துவப் பரிசோதனை அறிக்கைகளை, போலீசு கேட்கும்படி தர முடியாது என அறிவிக்கட்டுமே!**

றார்கள் என்பதை மறுக்க முடியுமா? இலட் சக் கணக்கில இலஞ்சம் கொடுத்து மருத்து வக் கல்லூரியில் சேர்ந்து, போதைப் பொருட்களுக்கு அடிமையாகி இலஞ்ச - ஊழல் மூலமே பட்டம் பெற்று மருத்துவர்க ளாகிவிடும் செல்வந்தர் குடும்பம் செல்லப் பிள்ளைகள் இல்லை என்று கூற முடியுமா?

தானே மருத்துவப் பணியில் ஈடுபடா மல் உதவியாளர்களைக் கொண்டு சிகிச்சை அளிப்பவர்களும் உண்டு. பண வெறி பிடித்து சில மணி நேரத்தில் நூற்றுக் கணக்கான நோயாளிகளுக்கு ''சிகிச்சை அளித்து'' அனுப்பும் மருத்துவர்களும் உண்டு. கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலை யங்களில் பணிக்குப் போகாமல், கையொப்பம் போட்டு சம்பளம் வாங்கிக் கொண்டு, அருகிலுள்ள நகரில் தனியாகத் தொழில் நடத்தும் மருத்துவர்களும் உண்டு. பகற்கொள்ளையடிக்கும் தனியார் மருத்துவமனைகளோடு கூட்டு வைத்துக் கொண்டும், வெளியே தனியே மருத்துவக் கூடங்கள் வைத்தும் அரசு மருத்துவமனை களில் வாடிக்கையாளர்களைப் பிடிக்கும் மருத்துவர்களும் உண்டு. மருந்துக் கம்பெ னிகள் கொடுக்கும் சிபாரிசுகளையும், ''சாம்பிள்'' மருந்துகளையும் கண்ணை மூடிக் கொண்டு நோயாளிகளுக்கு வழங் கும் மருத்துவர்களும் உண்டு. ஆரம்பத்

தில் தவறான சிகிச்சை அளித்துவிட்டு, அத னால் பாதிப்பு ஏற்பட்டவுடன் வெளியில் சொல்லாது மூடிமறைத்து, நோய் கடுமை யாவதையோ, பக்க விளைவையோ தடுக் கும் வாயப்பைக் கெடுத்து விடுபவர்களும் உண்டு. இதன் மூலம் எதிர்பாராத கவனக் குறைவையே கிரிமினல் அலட்சியம் என் கிற குற்றமாக இவர்கள் மாற்றிவிடுவதும் உண்டு.

இவற்றைவிட முக்கியமாக பாலியல் வல்லுறவு மற்றும் கொட்டடிக் கொலை வழக்குகளில் பிரேதப் பரிசோதனை அறிக் கைகளை, போலீசு கேட்கும் பொய்யான முடிவுகளோடு கொடுத்து அவர்களின் கிரி மினல் குற்றத்தில் உடந்தையாக பல மருத் துவர்கள் இருக்கிறார்கள். ''மருத்துவர்கள் அப்படிச் செய்யக் கூடாது, தொழில் நிய திக்கு விசுவாசமாக நடக்க வேண்டும்'' என்று அனைத்திந்திய மருத்துவக் கவுன் சிலே தீர்மானம் போட்டுள்ளது. மேலும் உடல் உறுப்புகளைத் திருடியும் கடத்தியும் கிரிமினல் குற்றம் புரிபவர்களுடன் சில மருத்துவர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

இப்படிப்பட்டவர்கள் ஒரு சிலரானா லும், இந்தத் தவறுகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் மருத்துவர்கள் அனைவ ரும் தேவையானபோது தம்மை விசார ணைக்கு உட்படுத்திக் கொள்வதுதான் சரி யானது; அவசியமானது. இன்னும் மருத்து வர்களிடம் காணப்படும் சமூக விரோதச் செயல்களை எதிர்த்த போராட்டங்களை மருத்துவர்களே ஆதரிப்பதன் மூலம் தமது மதிப்பைத் தாமே உயர்த்திக் கொள்ள முடி யும். ஒரு மருத்துவரை உருவாக்குவதற்கு 5.38 இலட்சம் ரூபாய் அரசு நிதி - மக்கள் பணம் செலவழிக்கப்படுகிறது. அதற்கு பொறுப்பாக அரசுத் துறையில், குறிப்பாக கிராமப் புறங்களில் பணியாற்ற மருத்துவர் கள் மறுப்பது, வெளிநாடுகளுக்கு ஓடிப் போவது, கம்பெனி பாணி மருத்துவமனை களில் தஞ்சமடைவது போன்ற சமூகப் பொறுப்பின்மைக்கு எதிராக மருத்துவர் களே போராட, வாதாட முன்வர வேண் டும்.

• பவீர்




**விவசாயிகள் விடுதலை முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து நடத்தி வரும் ''மான்சாண்டோ'' எதிர்ப்பு இயக்கத்தை ஒட்டி வெளியிடப் பட்டுள்ள நூல்.**

**நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனியை விரட்டியடிப்போம்!**

விலை : ரூ. 5/- பிரதிகளுக்கு:
இரா. சீனிவாசன், உதயசூரியன் தேநீரகம், காந்திபுரம்,
தில்லைநகர் 5-ஆவது குறுக்குத் தெரு, திருச்சி - 620 018.




படிப்பகம்

www.padippakam.com

# புதிய வடிவங்களில் தொடரும் தீண்டாமை

பீகாரில் மேல்சாதிவெறி ரன்பீர் சேனா குண்டர்கள் தாழ்த்தப்பட்டோர் மீது கொலைவெறித் தாக்குதலை நடத்திவரும் அதே வேளையில், ஆந்திராவின் மேல் சாதி வெறியர்கள் புதிய உத்தியுடன் தீண்டாமைக் கொடுமையைப் பின்பற்றி தாழ்த்தப்பட்டோரை வதைத்து வருகின்றனர்.

ஆந்திராவின் கிழக்கு கடற்கரை நகரமான விசாகப்பட்டிணத்தை அடுத்துள்ள அனந்தபுரம் பஞ்சாயத்திலுள்ள சிறிய கிராமம்தான் பல்லபு குமாரபுரம். இக்கிராமத்தில் 12 தாழ்த்தப்பட்டோர் குடும்பங்கள் உள்ளன. இக்கிராமத்தின் பொதுக் கிணற்றில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுக்கத் தடைவிதித்து மேல்சாதிவெறியர்கள் நீண்டகாலமாகத் தீண்டாமையைக் கடைபிடித்து வருகின்றனர். இக்கொடுமையை தாழ்த்தப்பட்டோர் எதிர்த்து வந்த நிலையில், இதுபற்றிய செய்திகள் மெதுவாகக் கசிந்து பத்திரிகைகளில் வெளிவந்து அம்பலமானது. இதனால் ஆத்திரமடைந்த மேல்சாதி வெறியர்கள், இத்தகைய பத்திரிகை செய்திகளால் தமது கிராமத்துக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளதாகக் கூறிக்கொண்டு, புதிய உத்தியுடன் தீண்டாமையைச் செயல்படுத்தி, தாழ்த்தப்பட்டோரை வதைக்கின்றனர்.

தீண்டாமைக் கொடுமை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளியானதும், பொதுக்கிணற்றில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுக்க மேல்சாதியினர் தாராள அனுமதி அளித்துள்ளனர். அதேசமயம், அந்தக் கிணற்றில் மேல்சாதியினர் எவரும் தண்ணீர் எடுக்காமல் புறக்கணித்துள்ளனர். இப்போது மேல்சாதியினர் தமது விவசாய நிலத்திலுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்கின்றனர். ஊர் பஞ்சாயத்தைக் கூட்டி, இக்கிராமத் தாழ்த்தப்பட்டோர் எவருக்கும் யாரும் வேலை கொடுக்கக்கூடாது என்று கட்டுப்பாடும் போட்டுள்ளனர். கூலி விவசாயிகளான இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்டோர் இப்போது வேலையின்றி, குடும்பத்துடன் பட்டினியில் பரிதவிக்கின்றனர். வேலையோ, வருமானமோ இல்லாததால், பச்சிளம் குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் கொடுக்கக் கூட வழியின்றி தாழ்த்தப்பட்டோர் குமுறுகின்றனர்.

இவை மட்டுமல்ல; தமக்குச் சொந்தமான புளியமரங்களில் கூட தாழ்த்தப்பட்டோர் தமது ஆடு - மாடுகளைக் கட்டக்கூடாது. இலை - தழைகளைப் பறிக்கக்கூடாது என்று தடைவிதித்துள்ளனர். கிராமக் கோயிலின் வெளிப்புறத்தை அன்றாடம் கூட்டி சுத்தம் செய்யும் வேலைக்குக்கூட தாழ்த்தப்பட்டோரை மேல்சாதிவெறியர்கள் இப்போது அனுமதிப்பதில்லை. இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் வேலையின்றி, வருவாயின்றி பட்டினி கிடந்து சாக வேண்டும்; அல்லது ஊரைவிட்டே ஓடவேண்டும் என்கிற பழிவாங்கும் வெறியுடன், புதிய உத்தியுடன் மேல்சாதிவெறியர்கள் தீண்டாமையைச் செயல்படுத்தி வருகின்றனர்.

''அவர்கள் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க விரும்பினார்கள். நாங்கள் விட்டுக் கொடுத்துவிட்டோம். அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதும், மறுப்பதும் எமது விருப்பத்தைப் பொருத்தது. இதிலே தீண்டாமைக் கொடுமை எங்கே உள்ளது?'' என்று மேல்சாதிவெறியர்கள் நியாயவாதம் பேசுகின்றனர். இத்தனைக்கும் பிறகும் மேல்சாதி வெறியர்களைக் கைது செய்து தண்டிக்க எந்த ஆட்சியாளரும் தயாராக இல்லை. வருவாய் துறை, வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கண்துடைப்பு விசாரணை நடத்திவிட்டு, இருதரப்பும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்று உபதேசித்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

★☆★

''இப்படி நாட்டின் எங்கோ ஒரு மூலையில், ஒரு குக்கிராமத்தில் இன்னமும் தீண்டாமைக் கொடுமை இருக்கலாம். அவை காலப்போக்கில் மாறிவிடும். ஆனால் நகர்ப்புறத்தில் இத்தகைய நிலைமைகள் எதுவும் கிடையாது. நகரத்தில் யார் சாதி பார்க்கிறார்கள்? எல்லோரும் சகோதரர்களாக வாழ்கிறார்கள்'' என்று சில மேதாவிகள் பேசி வருகின்றனர். ஆனால் கிராமமானாலும் நகரமானாலும் தீண்டாமை புதுப்புது வடிவில் தொடர்கிறது என்பதே உண்மை. தலைநகர் டெல்லியிலேயே உயர்கல்வி கற்கும் மருத்துவத்துறை மாணவர்கள் மீது மேல்சாதி வெறியர்கள் அண்மையில் நடத்திய தாக்குதலே இதை நிரூபித்துக் காட்டுகிறது.



தலைநகர் டெல்லி - ஷகாதாராவில் உள்ள மருத்துவ விஞ்ஞான பல்கலைக் கழகக் கல்லூரியில் (UCMS) சுதிர்குமார் என்ற தாழ்த்தப்பட்ட மாணவர் மருத்துவர் பட்ட இறுதியாண்டு படித்து வருகிறார். கடந்த பிப்ரவரி 22 - ஆம் தேதியன்று இரவு அவர் விடுதியில் உள்ள இயங்கு ஏணி (லிப்ட்) அருகே தனது நண்பருடன் மேல்தளத்திலுள்ள தனது அறைக்குச் செல்லக் காத்திருந்தார். அப்போது அங்கு வந்த மேல்சாதிவெறி மாணவர்கள், ''சத்துவுக்கு வழிவிடுங்க!'' என்று அவர்களைப் பார்த்து கேலி செய்து இழிவுபடுத்தினர். ''சத்து'' என்ற வடமொழிச் சொல், மிகவும் ஆபாசமான, கொச்சையான முறையில் தாழ்த்தப்பட்டோரை இழிவுபடுத்தும் சொல்லாகும். சுதிர்குமார் இதைக் கண்டித்ததையொட்டி நடந்த வாக்குவாதத்தில் மேல்சாதிவெறி மாணவர்கள், அவரையும் அவரது நண்பரையும் மிருகத்தனமாகத் தாக்கிவிட்டு, பீகார் - ஜெகன்னாபாத் மாவட்டத்தில் என்ன நடந்ததோ அதை நடத்திக் காட்டுகிறோம், பார்! என்று எச்சரித்து விட்டுச் சென்றனர். தாக்கப்பட்ட இரு மாணவர்களும் விடுதிக் காப்பாளரிடம் முறையிட்டதும், அவர் விடுதிக்கு வந்து பார்வையிட்டு, சுதிர்குமாரை அவரது அறையிலே தங்கியிருக்குமாறும், மேல்சாதி மாணவர்கள் வெறிகொண்ட நிலையில் உள்ளதால் அறையை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்றும் எச்சரித்து விட்டு திரும்பி விட்டார்.

சிறிது நேரத்தில் 70-க்கும் மேற்பட்ட மேல்சாதி மாணவர்கள் விடுதியின் எட்டாவது தளத்திலுள்ள சுதிர்குமாரின் அறைக்கு வந்து, கதவை உடைத்து அவரை மிருகத்தனமாகத் தாக்கி மொட்டை மாடிக்கு இழுத்துச் சென்று அங்கு அனைவரும் சூழ்ந்து கொண்டு தாக்கியதோடு, சாதியைச் சொல்லி இழிவுபடுத்தினர். விடுதியின் ஒவ்வொரு மாடியிலும் உள்ள ஒலிபெருக்கிச் சாதனம் மூலம் ''சத்து''-க்



படிப்பகம்

www.padippakam.com

களை அடக்க அனிதிரளுமாறு மேல்சாதி மாணவர்களுக்கு அறைகூவல் விடுத்து, அதன்படியே விடுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களின் ஒவ்வொரு அறையாக நுழைந்து சூறையாடி அவர்களைத் தாக்கினர்.



இத்தாக்குதல்களுக்குப் பிறகும் வெறி அடங்காத மேல்சாதி மாணவர்கள், விடுதியை அடுத்துள்ள குரு தேஜ் பகதூர் மருத்துவமனைக்குள் நுழைந்து அங்கு பணியிலிருந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஜஸ்வந்த்சிங் என்ற மருத்துவரை அடித்து, வெளியே வீசியெறிந்து சூழ்ந்து கொண்டு தாக்கினர். பின்னர் இளநிலை பயிற்சி மருத்துவர் விடுதிக்கு அவரை இழுத்து வந்து, தாழ்த்தப்பட்ட பயிற்சி மருத்துவர்களின் அறைகளைக் காட்டச் சொல்லி அவரைக் கொடூரமாக வதைத்தனர். படுகாயமுற்று நிலைகுலைந்த அவர், வேறுவழியின்றி பல்விந்தர் சிங் என்ற பயிற்சி மருத்துவரின் அறையைக் காட்டினார். இதற்கிடையே இச்சாதிவெறித் தாக்குதலைப் பற்றி அறிந்த பல்விந்தர்சிங், விடுதியின் மொட்டை மாடியிலுள்ள தண்ணீர்த் தொட்டியில் பதுங்கிக் கொண்டார். பல்விந்தர் சிங்கின் அறையை முற்றுகையிட்ட மேல்சாதி வெறியர்கள், அங்கு அவர் இல்லாத ஆத்திரத்தில் அந்த அறையைச் சூறையாடி நாசப்படுத்தினர். அந்த அறையின் சுவற்றில் "ஜெகன்னாபாத் ஹா! ஹா!"; "சர்தார் சத்து!" என்றும் கிறுக்கி வைத்து தமது சாதிவெறியைப் பறைசாற்றினர்.

இச்சாதிவெறித் தாக்குதலைத் தொடர்ந்து, பல்கலைக்கழகம் ஒரு விசாரணைக் கமிட்டியை நிறுவியது. அக்கமிட்டி தனது இடைக்கால அறிக்கையில், பயிற்சி மருத்துவர் ஜஸ்வந்த்சிங் மீதான தாக்குதல் அநீதியானது; அவமானகரமானது என்று குற்றம் சாட்டுகிறது. அதேசமயம் சுதிர்குமார் மீதும், ஜஸ்வந்த சிங் மீதும் நடந்த தாக்குதலுக்கு சாதிவெறி காரணமல்ல; கல்லூரி விழாவில் பெண்களைக் கேலி செய்ததையொட்டி மாணவர்களிடையிலான குழுச் சண்டையே காரணம் என்று பிரச்சினையைத் திசைதிருப்பியுள்ளது. சுதிர்குமார் மீது பொய்வழக்கு சோடிக்கும் நோக்கத்தோடும், சாதிவெறித் தாக்குதலை மாணவர்களின் குழுச் சண்டையாகக் காட்டி மூடி மறைக்கும் நோக்கத்தோடும், இத்தாக்குதல் நடந்த 15 நாட்களுக்குப் பிறகு பெண்களைக் கேலி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சுதிர்குமார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அநியாயத்தை எதிர்த்தும், விசாரணைக் கமிட்டியின் மோசடி அறிக்கையை எதிர்த்தும் கடந்த மார்ச் 5-ஆம் தேதியன்று தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தொடர் முழக்கப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இம்மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவமனையிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களும் மருத்துவர்களும் தீண்டத்தகாதவர்களாகவே நடத்தப்படுகின்றனர். மாணவர் விடுதியின் 4-வது மற்றும் 8-வது தளங்கள் தாழ்த்தப்பட்டோரை மட்டுமே கொண்டுள்ளன. இதர தளங்கள் மேல்சாதி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு அறைகூட தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்படவில்லை. இதுதவிர, உணவு விடுதியிலும் பிற சாதியினருடன் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்ந்து உணவருந்த முடியாது. தாழ்த்தப்பட்டோருக்கென தனி மேசைகளும் தட்டுகளும் வைக்கப்பட்டுள்ளன. இளநிலை பயிற்சி மருத்துவர்கள், தமது இறுதித் தேர்வின் போது என்ன சாதி என்று கேட்கப்பட்டு அதற்கேற்ப பாரபட்சமாக மதிப்பீடு செய்யப்படுகின்றனர். இந்த உண்மைகளை வடநாட்டுப் பத்திரிகைகளே ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளன.

★☆★

பீகாரின் ஜெகன்னாபாத்; ஆந்திராவின் பல்லபு குமாரபுரம்; டெல்லி மருத்துவ விஞ்ஞான பல்கலைக் கழகம் - அனைத்திலும் சாதிவெறியும் தீண்டாமைக் கொடுமையும் புதுப்புது வடிவங்களில் தொடரவே செய்கின்றன. பீகாரில் மேல்சாதி வெறியர்களின் தனி வகை குண்டர்படையின் கொலைவெறியாட்டம்; ஆந்த்ரா உளளிட்டு நாட்டின் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்டோரைப் பட்டினிக்குத் தள்ளிப் பழிவாங்கும் புதிய வகை தீண்டாமை; டெல்லியில் இட ஒதுக்கீடு சலுகை பெற்று உயர்கல்வி கற்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மனிதனாக மதிக்கப்படாமல் இழிவுபடுத்தப்படும் கொடூரம்! மேல்சாதி வெறியர்களின் கையில் அரசியல் அதிகாரம் உள்ளவரை, ஏட்டில் உள்ள வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தாலோ, இடஒதுக்கீட்டுச் சலுகைகளாலோ தாழ்த்தப்பட்டோர் மீதான சாதிவெறி அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. அரசியல் அதிகாரத்துக்கான புரட்சி இல்லாமல் இத்தகைய சில்லறைச் சீர்திருத்தங்களால் சாதி ஆதிக்கத்தையோ, தீண்டாமைக் கொடுமையையோ தகர்த்தெறியவும் முடியாது. இந்த உண்மையை நாடெங்கும் தொடரும் சாதிவெறித் தாக்குதல்கள் மீண்டும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

• குமார்

சுவரெழுத்து - சுவரொட்டிகளுக்குத் தடை விதித்து போடப்பட்டக் கருப்புச் சட்டத்தை தி.மு.க. அரசு இப்போது முனைப்புடன் செயல்படுத்தக் கிளம்பியுள்ளது.

"நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனியை விரட்டியடிப்போம்!" என்ற முழக்கத்துடன் பிரச்சார இயக்கத்தை நடத்தி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி மற்றும் அதன் தோழமை அமைப்பினர் சுவரெழுத்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது, கடந்த மாதத்தில் தமிழகமெங்கும் பல இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெய்வேலியில் கடந்த 3.4.99 அன்று சுவரெழுத்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தொழிலாளர் பிரச்சாரக் குழுவைச் சேர்ந்த 4 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். வழக்கு மன்றத்தில், சுவருக்குச் சொந்தக்காரரின் புகாரோ, அரசு வழக்கறிஞரின் ஒப்புதல் அறிக்கையோ இல்லாமல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த போலீசாரை நீதிபதியே கண்டித்துப் பிணையில் விட உத்திரவிட்டார். புரட்சிகர இயக்கங்களைப் பழிவாங்கி, ஒடுக்கத் துடிக்கும் போலீசு கும்பலின் அதிகார முறைகேட்டை அம்பலப்படுத்தி உடனடியாக சுவரொட்டிப் பிரசாரத்தை தொ.பி.குழு நடத்தியது. தகவல்: தொ.பி.குழு, நெய்வேலி.



படிப்பகம்

www.padippakam.com

# ஈக்வடார்: குமுறும் எரிமலை

**தனியார்மய - தாராளமயக் கொள்கைகளால் திவாலாகி வரும் ஈக்வடார் நாட்டில், அப்பொருளாதாரச் சுமைகளை மக்கள் மீது திணிக்க ஆட்சியாளர்கள் செய்த எத்தணிப்புகளை, மக்களின் உறுதியான போராட்டங்கள் தகர்த்தெறிந்து வருகின்றன.**

தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள சின்னஞ்சிறு நாடான ஈக்வடாரில், உலக வங்கியும் ஐ.எம்.எஃப்-பும் திணித்த மக்கள் விரோத மறுகாலனியாதிக்கக் கொள்கைகளுக்கு எதிராக, கடந்த மார்ச் மாதத்தில் நடந்த நாடு தழுவிய போராட்டங்களைக் கண்டு ஏகாதிபத்தியவாதிகள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். அனைத்துலக நாணய நிதியத்தின் (ஐ.எம்.எஃப்) நிர்வாக இயக்குநரான மிகெல் காம்டேசஸ், ஈக்வடார் தொலைக்காட்சியில் தோன்றி, ''போராட்டத்தைக் கைவிட்டு அமைதியையும் ஒற்றுமையையும் கட்டிக் காக்காவிட்டால், ஈக்வடாருக்கு எந்த நாடும் உதவி செய்யாது'' என்று எச்சரித்த போதிலும், ஈக்வடார் மக்கள் போராட்டத்தை நிறுத்தவில்லை. ஐ.எம்.எஃப். திணித்த தாராளமய - உலகமயக் கொள்கையையும், சிக்கன - சீரமைப்பு நடவடிக்கைகளையும், விலையேற்றத்தையும் கைவிடுவதாக அந்நாட்டின் அதிபர் அறிவித்த பிறகே, நாடு தழுவிய மக்கள் போராட்டம் தற்காலிகமாகத் தணிந்துள்ளது.

தென்னமெரிக்கக் கண்டத்தில் பசிபிக் பெருங்கடலை ஒட்டியுள்ள மேற்கிலுள்ள சின்னஞ்சிறு நாடுதான் ஈக்வடார். வாழை, காபி, கோகோ உற்பத்தியும் எண்ணெய் வளமும் மிக்க அந்நாடு, நீண்டகாலமாகவே அமெரிக்க வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் சிக்கித் தவிக்கிறது. குறிப்பாக, உலக வங்கியும் ஐ.எம்.எப் - பும் திணித்த கட்டுமான சீரமைப்புக் கொள்கைகளின் விளைவாக, அந்நாட்டில் விளையும் உற்பத்திப் பொருட்களுக்கு விலையை நிர்ணயிக்கும் உரிமையைக்கூட ஈக்வடார் அரசு இழந்துவிட்டது. அவற்றை அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்களும், அனைத்துலக நிதி நிறுவனங்களுமே தீர்மானிக்கின்றன.

1950-லிருந்து 60 - வரை ஈக்வடாரின் கோகோ உற்பத்தி 30% அதிகரித்த போதிலும், மொத்தத்தில் 5% வருவாய் மட்டுமே அந்நாட்டுக்குக் கிடைத்தது. எஞ்சிய பெரும் பங்கை பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் சுருட்டிக் கொண்டன. ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்ட ஈக்வடாரில், 1970-லிருந்து ஏறத்தாழ முக்காற்பங்கு மக்கள் வறுமையிலும் வேலையின்றியும் பரிதவிக்கின்றனர். கடந்த 20 ஆண்டு காலமாக அமெரிக்காவின் பாதந்தாங்கும் சிறுகும்பலின் சர்வாதிகார ஆட்சியே தொடர்கிறது. அண்டை நாடான பிரேசிலின் வழியில், உலக வங்கி - ஐ.எம்.எஃப்-பின் மேற்பார்வையில் தனியார்மய - தாராளமய - உலகமயக்கொள்கைகள் கடந்த பத்தாண்டுகளாக ஈக்வடாரில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. ஆயினும், இக்கொள்கைகள் படுதோல்வி அடைந்து, மீளமுடியாத பொருளாதார நெருக்கடியிலும் வறுமையிலும் அந்நாடு சிக்கித் தவிக்கிறது.

1994-இல் இத்தகைய நெருக்கடிகள் தீவிரமானதும், ஈக்வடார் வாங்கிய அந்நியக் கடன்களுக்கான வட்டியை விரைவாகச் செலுத்த, பட்ஜெட் பற்றாக்குறையை உடனடியாகக் குறைக்குமாறு ஐ.எம்.எஃப். உத்திரவிட்டது. இதனால் நாட்டின் மொத்த வருவாயில் 60% தொகையை அந்நியக் கடன்களுக்கான வட்டி செலுத்த ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலைக்கு ஈக்வடார் தள்ளப்பட்டது. இதன் விளைவாக சேவைத் துறைகளுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய முடியாமல் போனதோடு, பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுசெய்ய அரசுத்துறை நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு அமெரிக்க நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன. அதேசமயம், ஈக்வடாரின் நாணய மதிப்புச் சரிவினால் வட்டிச்சுமை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போனது. வட்டிச் சுமையைக் குறைக்க மீண்டும் மானியங்கள் வெட்டு, கூடுதல் வரிவிதிப்பு, கட்டண உயர்வு, அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது என நாடும் மக்களும் மொட்டையடிக்கப்பட்டனர்.




1994 - இல் இதேபோல நெருக்கடி முற்றி வட அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடான மெக்சிகோ திவாலான நேரத்தில், அந்நாட்டின் சியாபாஸ் பிராந்திய விவசாயிகள் ஆயுதந்தாங்கிய எழுச்சியை நடத்தி, அப்பிராந்தியத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இதை முன்னுதாரணமாகக் கொண்டு, ஈக்வடாரின் மார்க்சிய - லெனினியக் கட்சியும், செவ்விந்திய விவசாயிகளின் சங்கங்களும் ஒன்றிணைந்து, 1994 - ஜூன் மாதத்தில் ஆயுதந்தாங்கிய எழுச்சியை நடத்தி நாட்டின் தென் பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன.

விவசாயிகளின் எழுச்சியைத் தொடர்ந்து நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்தன. அடுத்த மூன்றாண்டுகளில் விவசாயச் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் ஐக்கியப்பட்டு, ஐ.எம்.எப் - பின் சீரமைப்புக் கொள்கைகளுக்கு எதிராகவும் சர்வாதிகார அதிபருக்கு எதிராகவும், போராட்டங்களை நடத்தின. இராணுவத்தை ஏவி அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட போதிலும், மக்களின் போராட்டத் தீயை தணிக்க முடியவில்லை. நிலைமை விபரீதமாவதைக் கண்டு பீதியடைந்த அமெரிக்க வல்லரசு,



படிப்பகம்

www.padippakam.com

பொதுத் தேர்தல் நடத்தி மக்களின் போராட்ட வெள்ளத்துக்கு வடிகால் வெட்ட முயன்றது.

1998 - ஆகஸ்ட்டில் நடந்த பொதுத் தேர்தலில் ஜமீல் மகௌத் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனாலும் அமெரிக்கக் கட்டளைப் படி, தனியார்மய - தாராளமய - உலக மயக் கொள்கைகளை அவர் விசுவாச மாகச் செயல்படுத்தியதன் விளை வாக, திவாலான ஈக்வடாரின் எஞ் சிய செல்வங்களும் சூறையாடப்பட் டன. சிக்கனச் சீரமைப்பு என்ற பெய ரில் மானியங்கள் வெட்டப்பட்டு, ரேஷன் கடைகள் மூடப்பட்டன. பொருளாதார நெருக்கடியைக் கார ணம் காட்டி தொழிலாளர்கள், அரசு ஊழியர்களின் ஊதியங்கள் முடக்கப் பட்டன. பெட்ரோல் விலை 350%-ம் தொலைபேசிக் கட்டணம் 800%-ம் உயர்த்தப்பட்டன. இவற்றுக்கெதிராக மக்கள் போராட்டங்கள் பெருகிய தும், கடந்த மார்ச் முதலாக நாடெங்கும் அவசரநிலையைப் பிரகடனப்படுத்திய அதிபர், இராணுவத்தைக் கொண்டு அடக் குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார்.




**வங்கி மூடலையும் பொருளாதாரத் தாக்குதலையும் எதிர்த்து தலைநகர் குவிடோவில் மக்கள் ஆர்ப்பாட்டம்: குமுறும் எரிமலை.**

இந்நிலையில், அரசியல் - பொருளா தார நெருக்கடிகளைக் காரணம் காட்டி ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் தமது முத லீடுகளைத் திரும்பப் பெற்றதன் விளை வாக, ஈக்வடாரின் நாணய மதிப்பு அதள பாதாளத்துக்குச் சரிந்துவீழ்ந்தது. இதனால் அந்நியச் செலாவணி இருப்பு குறைந்து, அதை ஈடுகட்ட உள்நாட்டு வங்கிச் சேமிப் புகளை அடகுவைத்து மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்கு ஈக்வடார் தள்ளப் பட்டது. அதிபர் ஜமீல், நாட்டின் அனைத்து வங்கிகளையும் மூடி, மக்கள் தமது அற்ப சேமிப்புகளைக் கூட வங்கிகளிலிருந்து எடுக்கத் தடைவிதித்தார். மறுபுறம் விலை யேற்றத்தையும் கட்டண உயர்வையும் திணித்தார்.

வேலையில்லை; சம்பளமில்லை; விண்ணைமுட்டும் விலைவாசி; வங்கி களிலிருந்து சேமிப்புகளையும் எடுக்கத் தடை என்றால் மக்கள் எப் படி வாழமுடியும்? ஆத்திரம டைந்த மக்கள் அதிபரின் கொடும் பாவியை எரித்து, வீதியில் போலீசு - இராணுவத்துடன் நேரடி மோத லில் இறங்கினர். விவசாயச் சங்கம், தொழிற்சங்கங்களோடு அரசு அலு வலர்களும் ஆசிரியர்களும் மாண வர்களும் போராட்டத்தில் குதித்த தும், உள்நாட்டுப் போர் நிலைமை யில் ஈக்வடார் தத்தளித்தது. ஆசி ரியர்கள் - மாணவர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கண்டு பீதியடைந்த கல்வி அமைச்சர் பதவி விலகி ஓடிப்போனார்.

மக்களின் போராட்டத்தை நசுக்க ஈக்வடார் ஆட்சியாளர்கள், அரசு பயங்கரவாத அடக்குமுறையைக் கட்ட விழ்த்துவிட்டு, தொழிற்சங்க - விவசாய சங்கத் தலைவர்களையும் புரட்சிகர மா-லெ கட்சியினரையும் நரவேட்டையாடி னர். மக்கள் ஜனநாயக இயக்கத்தின் (DPM) நாடாளுமன்றக் குழுத் தலைவரான ஜெர்மி ஹர்டாடோ மற்றும் இரு போராளிகள், நாடாளுமன்றக் கட்டிடத்துக்கு அருகி லேயே கூலிப்படையினரால் சுட்டுக் கொல் லப்பட்டனர். பிரபலமான போராட்டத் தலைவரான ஹர்டாடோவின் படுகொலை யைக் கண்டு வெகுண்டெழுந்த மக்களின் போராட்டம் நாடெங்கும் பெரும் புயலா கச் சுழன்றடித்தது.

இனியும் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் அதிபர் ஜமீல், வேறுவழியின்றி விலைவாசிகளை உடனடியாகக் குறைப்ப தாகவும், இரு மாதங்களில் வங்கி மூடலை நீக்கி நிலைமையைச் சீரமைப்பதாகவும் வாக்குறுதி அளித்த பிறகே, ஈக்வடார் மக்க ளின் போராட்டம் மார்ச் 20-ந் தேதியன்று தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட் டது. ஆனால், ஏகாதிபத்தியங்களின் மறு காலனியாகிவிட்ட ஈக்வடாரில், கைப் பாவை அதிபரால் ஒருக்காலும் நிலைமை யைச் சீரமைக்கமுடியாது. புயலுக்குப் பிந் தைய அமைதி, மீண்டும் ஒரு பெரும்புய லைத் தோற்றுவிக்கப் போவதையே நிலை மைகள் உணர்த்துகின்றன.

ஈக்வடார் மக்களின் போராட்டம், வெறுமனே விலையேற்றத்துக்கும் பொரு ளாதாரத் தாக்குதலுக்கும் எதிரான போராட்ட மல்ல; அது தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்துக்கு எதிராக உலகெங்கும் நடந்துவரும் போராட்டத்தின் ஓர் அங்கம். ஏழைநாடுகளைக் கொள்ளையிடும் உலக வங்கி - ஐ.எம்.எஃப்.பின் உத்தரவுகளை யும், உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைக ளையும், ஏகாதிபத்தியங்களின் சூறையா டல் - ஆதிக்கத்தையும் நாடாளுமன்ற - சட்டமன்றப் போராட்டங்களால் ஒருபோ தும் வீழ்த்த முடியாது. விவசாயிகளின் - உழைக்கும் மக்களின் ஆயுதமேந் திய எழுச்சிகளினால் மட்டுமே அவற்றின் ஆதிக்கத்தை ஆட்டங் காணச் செய்ய முடியும் என்ற உண் மையை ஈக்வடார் மக்களின் போராட்டம் நிரூபித்துக் காட்டுகி றது. வடக்கே மெக்சிகோவிலி ருந்து தெற்கே சிலி வரை அமெரிக் கக் கண்டத்து நாடுகளில் தொடரும் போராட்டங்கள், புரட்சிகர கட்சி யால் வழி நடத்தப்படும் போது புரட்சிப் புயலாகச் சீறியெழும்; அது ஏகாதிபத்திய மணற்கோட் டைகளைத் தகர்த்தெறியவே செய்யும்!

● மனோகரன்

**தாராளமயம் - தனியார்மயத்தால் பாலாறும், தேனாறும் ஓடும் எனப் புளுகி வரும் இந்திய ஆளும் வர்க்க கூலிப் பிரச்சாரகர்கள், அதே தனியார் மய - தாராளமயக் கொள்கைகள் நடை முறைப்படுத்தப்பட்ட ஈக்வடாரில், வறுமை கோரத் தாண்டவமாடுவதற்கு பதில் சொல்லட்டும்!**



படிப்பகம்

www.padippakam.com



## எஞ்சிய அரசு நிறுவனங்களும் அந்நியருக்குத் தாரை வார்ப்பு

தனியார்மயம் - தாராளமயம் எனும் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தி நாட்டை மறுகாலனியாக்கி வரும் ஆட்சியாளர்கள், இப்போது இலாபத்தில் இயங்கிவரும் அரசு - கூட்டுப் பங்கு நிறுவனமான மாருதி கார் தொழிற்சாலையின் பங்குகளைத் தனியாருக்கு விற்கத் தீர்மானித்து விட்டனர். மாருதி கார் நிறுவனத்தில் ஜப்பானின் சுசுகி மோட்டார் நிறுவனமும் இந்திய அரசும் தலா 50% அளவுக்கு முதலீடு செய்துள்ளன. தொடரும் பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்ட மாருதி கார் நிறுவனத்தின் அரசுப் பங்குகளை விற்பது அவசியமாகிவிட்டது என்று கூறிக் கொண்டு, ஏகாதிபத்தியத் தரகர்களாக உள்ள உயர் அதிகார வர்க்கக் கும்பல் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அரசின் பங்குகளை விற்பதன் மூலம் குறைந்தபட்சம் 1400 கோடி ரூபாய் கிடைக்கும் என்கின்றனர். இந்தியாவில் கார் உற்பத்தியில் பல அந்நிய நிறுவனங்களின் போட்டி நிலவுவதால், மாருதியின் இலாபம் அண்மைக் காலமாக குறைந்து வருகிறது; எனவே பங்குகளை இப்போதே விற்றுவிட்டால் கூடுதலாக ஆதாயம் கிடைக்கும் என்று நியாயவாதம் பேசி வருகின்றனர்.

இதன்படி அரசு, தனது பங்குகளை நேரடியாக விற்காமல் அவற்றை அரசு நிதி நிறுவனங்களுக்கு (யூ.டி.ஐ. போன்றவை) விற்கும். அந்நிறுவனங்கள் பின்னர் இப்பங்குகளை பங்குச் சந்தையில் நல்ல விலை வரும் போது விற்பது என்று ஏற்பாடாகியுள்ளது. இதன் மூலம் பங்குச் சந்தை சூதாட்டத்தில் மாருதிக்கு விலை வீழ்ச்சியை உருவாக்கி, பின்னர் அப்பங்குகளை சுசுகி, ஜெனரல் மோட்டார், ஃபோர்டு, ஹோண்டா முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு வாங்கி ஆதாயமடைவதற்கான ஏற்பாடு தான் இது. வங்கி - பங்குச் சந்தை மோசடியைப் போல, மாருதி பங்கு விற்பனையிலும் கோடி கோடியாய் சுருட்டி ஏப்பமிட அதிகார வர்க்கப் பெருச்சாளிகள் துடிக்கின்றன.


இதேபோல, இந்தியாவின் நவரத்தின அரசுத் துறை நிறுவனங்களில் ஒன்றான இந்துஸ்தான் பெட்ரோலியம் (HPCL) நிறுவனத்தை உலகின் ஏகபோக எண்ணெய் நிறுவனமான ''ஷெல் - ஆரம்கோ''-வுக்கு விற்றுவிட அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக, இவ்விரு நிறுவனங்களும் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக இயங்குவது; பின்னர் அரசுப் பங்குகளை விற்பது என்று தீர்மானித்துள்ளனர். ''ஷெல்'' நிறுவனம் முன் வராவிட்டால் அமெரிக்காவின் எக்சான் நிறுவனத்துக்கு விற்று விடவும் முயற்சித்து வருகின்றனர். மாருதியைப் போலவே இந்துஸ்தான் பெட்ரோலியப் பங்குகள் விற்பனை மூலம் ஏகாதிபத்திய நிறுவனங்களும் தரகு அதிகார வர்க்கக் கும்பலும் கோடி கோடியாய்க் கொள்ளையிடத் துடிக்கின்றன.

## அணுக்கதிர் வீச்சுத் தாக்குதல்: மூடி மறைக்கும் அதிகாரிகள்

சென்னையை அடுத்துள்ள கல்பாக்கம் அணு மின்நிலையத்தில் கடந்த மார்ச் 26-ந் தேதியன்று ஏற்பட்ட கனநீர் கசிவின் காரணமாக, அணுக்கதிர் வீச்சு தாக்கி 10 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அணு மின் நிலையத்தில், அணுச் சிதைவின் போது ஏற்படும் உயர்வெப்ப நிலையைக் குளிர்விக்க கன நீர் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கனநீரில் கலந்துள்ள ''டிரிஷியம்'' என்ற கதிர்வீச்சுத் தன்மை கொண்ட மூலக்கூறு, மனித உயிரையே பறித்து விடும் அளவுக்குக் கொடூரமானது. கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது பிரிவு அணு உலைகள் தற்காலிகமாக மூடப்பட்டு பராமரிப்பு - சீரமைப்புப் பணிகள் நடந்த வந்தபோது, கனநீர் கசிவு ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்தனர். கசிவை அடைக்கச் சென்ற தொழிலாளர்களின் பாதுகாப்புக் கவச உடைகளையும் மீறி, ''டிரிஷியம்'' அவர்களைத் தாக்கியுள்ளது. இதில் 10 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

''அணுசக்தி கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள அளவை விட மிகக் குறைவான அளவுக்குத்தான் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நலமுடனேயே உள்ளனர். மறுநாளே அவர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கோ மற்ற ஊழியர்களுக்கோ எவ்விதக் கதிர்வீச்சு பாதிப்பும் ஏற்படவில்லை'' என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.



இயங்கினாலும் ஆபத்து; மூடினாலும் ஆபத்து: கதிர் வீச்சு அபாயத்தைக் கருக்கொண்டு நிற்கும் கல்பாக்கம் அணு மின்நிலையம்.

ஆனால், ''பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இன்னமும் உயிருக்கு ஆபத்தான நிலையிலேயே உள்ளனர். அவர்களுக்கு நிறைய தண்ணீர் கொடுத்து, சிறுநீர் கழிக்கச் செய்து, டிரிஷியத்தை வெளியேற்ற முயற்சி நடந்துள்ளது. மேலும், இக்கதிர்வீச்சுத் தாக்குதலுக்குப் பிறகு 2-ஆவது பிரிவு அணுமின் நிலையத்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. டிரிஷியத்தின் வீரியம் குறைவாக இருந்ததாகக் கூறப்பட்டாலும், கசிந்து வெளியேறிய கனநீரின் அளவு 6 முதல் 14 டன்கள் வரை இருக்கலாம் என்பதால், பாதிப்பு கடுமையாகவே இருக்கும்'' என்று கல்பாக்கம் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உரிய பாதுகாப்புச் சாதனங்களோ, தொழில் நுட்ப வசதிகளோ இன்றி கோடிகோடியாய் நமது வரிப்பணத்தை வாரியிறைத்து இயக்கப்படும் இந்தியாவின் அணுமின் நிலையங்கள், அனைத்து தொழிலாளர்களின், சுற்றுப்புற பகுதிவாழ் மக்களின் உயிரோடு விளையாடுபவையாகவே உள்ளன. கல்பாக்கம் மட்டுமின்றி, இந்தியாவின் அனைத்து அணு உலைகளிலும் ஆண்டுதோறும் 10 முதல் 50 டன் அளவுக்கு கனநீர் கசிவு ஏற்பட்டு பெருத்த பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய விபத்துகள், கதிர்வீச்சுத் தாக்குதல்கள் பற்றிய விபரங்கள் திட்டமிட்டே மூடிமறைக்கப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்பு - இரகசியம் என்ற பெயரில் இக்கொடூரங்களை மூடிமறைக்கும் இந்திய அணுசக்தி சட்டத்தை இனியும் தொடர அனுமதிப்பது, நாட்டு மக்களின் வாழ்வுரிமைக்கே எதிரானதாகும்.

## உலக வங்கி உத்தரவு பட்ஜெட்டில் வரி திணிப்பு

இராசஸ்தான் மாநிலத்தில் காங்கிரசு அரசு சமர்ப்பித்துள்ள



படிப்பகம்

www.padippakam.com



நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட்டை எதிர்த்து அம்மாநிலமெங்கும் போராட்டங்கள் தீவிரமாகி வருகின்றன. தற்போதைய பட்ஜெட்டில் வியாபாரிகள், தொழிலதிபர்கள் மீது மட்டுமின்றி, நடுத்தர வர்க்கத்தினரான அரசு ஊழியர், ஆசிரியர், எழுத்தாளர், ஓவியர், மருத்துவர், வழக்கறிஞர், புரோகிதர் மீதும் முதன்முறையாக தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது. கைத்தறி, தரைவிரிப்பு உற்பத்தியாளர்கள் மீது 25% கூடுதலாக விற்பனைவரி சுமத்தப்பட்டுள்ளது. விவசாயத்துக்கான நீர்ப்பாசன வரியும், மின்கட்டணமும் 100% அதிகரிக்கப்பட்டுள்ளது. செயற்கை வைரங்கள் பட்டை தீட்டும் தொழிலுக்கும், நகை உற்பத்திக்கும் கூடுதலாக தொழில் வரியும் விற்பனை வரியும் போடப்பட்டுள்ளது. நகரங்களில் குடிநீர்க் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இவை தவிர, உப்பு உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மீதும் விற்பனை வரி கூடுதலாக்கப்பட்டு, அதன் சுமை முழுவதும் உழைக்கும் மக்களின் முதுகில் ஏற்றப்பட்டுள்ளது.

இக்கடுமையான பொருளாதாரத் தாக்குதலை எதிர்த்து விவசாயிகள் - நெசவாளர்களிலிருந்து ஆசிரியர்கள், மருத்துவர்கள் வரை அனைத்துத் தரப்பு மக்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் அரசு ஊழியர்களும் தொழில்வரிச் சுமையை எதிர்த்து கடந்த ஏப்ரல் 15-ந் தேதியன்று மாநிலந்தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். நகை - வைர வியாபாரிகளும் தொழிலாளர்களும் வரிச் சுமையை எதிர்த்து கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினர். ஆளும் காங்கிரசுக் கட்சியிலேயே பெரும்பான்மை எம்.எல்.ஏ.க்கள், பட்ஜெட் தாக்குதலை வெளிப்படையாகவே கண்டித்தனர். மாநில காங்கிரசுத் தலைவியான கிரிஜா வியாஸ், ''மக்களைப் பற்றி அறியாத அதிகார வர்க்கத்தின் தவறான ஆலோசனைப்படி முதல்வரும் நிதியமைச்சரும் கண்ணை மூடிக் கொண்டு வரிச்சுமையைத் திணித்துள்ளனர்'' என்று கண்டன அறிக்கை வெளியிட்டார். பெருகிவரும் மக்கள் போராட்டங்களாலும், கட்சிக்குள்ளேயே அதிகரித்து வரும் எதிர்ப்பாலும், எதிர்கட்சிகளின் தாக்குதலாலும் தனிமைப்பட்டுப் போன முதல்வர் அசோக் கெலாட், இப்போது வரிச்சுமையை சற்றே குறைப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

வரலாறு காணாத இந்த வரிச்சுமைக்குக் காரணமே, உலக வங்கியின் உத்தரவுதான். இராசஸ்தான் மாநில அரசு, பல்வேறு திட்டங்களுக்காக உலக வங்கியிடம் பெருமளவு கடன் வாங்கியுள்ளது. அதன் கட்டளைப்படியே, கடனையும் வட்டியையும் விரைவாகத் திருப்பிச் செலுத்தக் கடுமையாக வரிவிதிப்புகளை மாநில அரசு மக்கள் மீது திணித்து வருகிறது. முன்பு, பாரதீய ஜனதா ஆட்சி இதேபோல உலக வங்கி உத்தரவுப்படி, பொருளாதாரத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டபோது முதலைக் கண்ணீர் வடித்த காங்கிரசு துரோகிகள், இப்போது ஆட்சியைப் பிடித்ததும், அதே வழியில், தம் பங்குக்கு தாக்குதலை நடத்துகின்றனர். இராசஸ்தானில் ஓட்டுக் கட்சி ஆட்சிகள் மாறினாலும், நிரந்தரமாக உலக வங்கி அதிகாரம் செலுத்திக் கொண்டு, மக்களை வதைத்து வருகிறது.

## வாழ்வையும் வளத்தையும் பறிக்கும் பிர்லாவின் ''கிரேசிம்'' ஆலை

கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் கடந்த 35 ஆண்டுகளாக இயங்கிவரும் தரகுப் பெருமுதலாளி பிர்லாவின் ''கிரேசிம்'' துணி ஆலையால் அப்பகுதிவாழ் மக்கள் தீராத நோய்களுக்கு ஆளாகி அவதிப்படுகிறார்கள். ஆலைக் கழிவுகளால் இங்கு பாயும் சாளியாறு கழிவு நீரோடையாகிவிட்டது. வயநாட்டுப் பகுதியிலுள்ள மூங்கில் காடுகள் சுற்றுச்சூழல் மாசு காரணமாக படிப்படியாக அழிந்து வருகின்றன. சாளியாற்றின் கரையில் உள்ள வாழக்காடு பகுதியின் 200 கிராமங்களில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் புற்றுநோயாலும் தோல்நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ''கிரேசிம்'' தொழிலாளர்களில் 25% பேர் புற்றுநோய், சுவாசக் கோளாறு மற்றும் இரத்த அழுத்த நோய்களால் அவதிப்படுகின்றனர். ''கிரேசிம்'' ஆலையைச் சுற்றியுள்ள அனைத்துக் கிராமங்களிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் நோயாளியாக - நடைப்பிணமாக உள்ளார். சாளியாற்று நீரில் கையை நனைத்தாலே அரிப்பும் எரிச்சலும் ஏற்படுகிறது. எனவே, சுற்றுச்சூழலை நஞ்சாக்கி, மக்களின் உயிரோடு விளையாடும் கிரேசிம் ஆலையை மூட வேண்டும் என்பதை விளக்கி, சுகுதகுமாரி என்ற சுற்றுச்சூழல்வாதி நீண்ட காலமாகப் போராடி வருகிறார். கிரேசிம் ஆலையால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி ஒரு செய்திக் குறும்படத்தைத் திரையிட்டுப் பிரச்சாரம் செய்து வருகிறார்.

அதேசமயம் கிரேசிம் ஆலை நிர்வாகமோ, தமது துணி ஆலையால் சுற்றுச் சூழலுக்கு எந்தப் பாதிப்புமில்லை, தொழிலாளர்கள் நலமுடனேயே இருக்கின்றனர் என்று நீண்டகாலமாக மோசடிப் புள்ளி விபரங்களுடன் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால் கிரேசிம் ஆலை அமைந்துள்ள மாவூர் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையின் நோய்ப் பதிவேடுகளே இந்த மோசடி - பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்துகின்றன. கிரேசிம் ஆலையில் பணியாற்றும் 4700 தொழிலாளர்களில் 911 பேர், அதாவது 25% பேர், சுவாசக் கோளாறினால் அவதிப்படுகின்றனர். அதேசமயம் ஆலை அமைந்துள்ள கோழிக்கோடு மாவட்ட மக்கள் தொகையில் 6% பேர் தான் சுவாசக் கோளாறு நோயால் அவதிப்படுகின்றனர்.

கடந்த மூன்றாண்டுகளில் சுவாசக் கோளாறினால் அவதிப்படும் தொழிலாளர் எண்ணிக்கை இருமடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக, ''இன்புளுயன்சா'' எனப்படும் சளிக்காய்ச்சல் நோயினால் 75% தொழிலாளர்கள் அவதிப்படுகின்றனர். இதுதவிர தோல்நோய், காதுமந்தம், இரத்த அழுத்தம், சிறுநீரக நோய், மூக்கில் இரத்தம் வடிதல், தொண்டை அயர்சி, மார்புச்சளி, ஆஸ்துமா, ஒவ்வாமை முதலான நோய்களில் 3151 தொழிலாளர்கள் இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அதே அளவுக்கு அவர்களது வாரிசுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என 1998-ஆம் ஆண்டின் நோய்ப் பதிவேடுகள் கூறுகின்றன. ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை அன்றி, பிற மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றோரின் விபரம் தெரியவில்லை. அதையும் சேர்த்துக் கணக்கிட்டால், பாதிப்புகளின் கோரம் அதிர்ச்சியளிப்பதாக இருக்கும்.

கேரள சட்டமன்றம் நிறுவிய ஆய்வுக் குழுவும், மத்திய அரசின் சுற்றுச்சூழல் - மாசு கட்டுப்பாட்டு வாரியம் நிறுவிய சென்குப்தா குழுவும் கிரேசிம் ஆலையால் சுற்றுச் சூழல் நஞ்சாகி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்த போதிலும், கேரள உயர்நீதி மன்றம் இந்த விவகாரத்தில் தலையிட்ட போதிலும், எந்தச் சக்தியாலும் கிரேசிம் ஆலையை மூடமுடியவில்லை. ஆலையை மூடினால் தொழிலாளர் வாழ்வு பறிக்கப்படும் என்று தொழிற்சங்கங்கள் இந்த நச்சு ஆலைக்கெதிராகப் போராட முன்வருவதில்லை. ஆளும் போலி கம்யூனிஸ்டுகளோ, இந்த ஆலையை மூடினால் மாநிலத்தின் தொழில் வளம் பாதிக்கும்; பெரு முதலாளிகளும் அந்நிய முதலாளிகளும் தொழில் தொடங்க வரமாட்டார்கள் என்று காரணம் காட்டி, எதிர்ப்பைக் கிடப்பில் போட்டுவிட்டனர். கேரளாவில் சுற்றுச் சூழலை நஞ்சாக்கி, தொழிலாளிகளை நோயாளிகளாக்கிவிட்ட கிரேசிம் ஆலையை மூட வக்கற்ற இத்துரோகிகள், இங்கு தமிழகத்தில் ஸ்டெர்லைட் நச்சு ஆலையை மூடச் சொல்லி சவடால் அடித்துக் கொண்டிருக்கின்றனர்.

## இனியும் தொடருமோ இந்தத் துயரம்?

வறுமை மிகக் கொடியது. வறுமையாலும் வேலையின்மையாலும் தத்தளித்துக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்க


படிப்பகம்

www.padippakam.com



ளில் சிலர் வேறுவழியின்றி அந்த வேலைக்கு ஒப்புக் கொண்டனர். ஆனால், அது அவர்களுள் ஐந்து பேரின் உயிரையே பறித்துவிட்டது.

மும்பய் நகரில் ஏராளமான வணிக வளாகங்களையும் வீட்டு மனைகளையும் வளைத்துப் போட்டுள்ள காங்கிரசுத் தலைவனாகிய டோனி அகர்வால், கிரிமினல் குண்டர்படைத் தலைவனாவான். இவனுக்குச் சொந்தமான ''மாருதி ஆர்கேடு'' என்னும் அங்காடியில் நிதின் தேசாய் என்பவர் ஒரு கணிப்பொறி மையத்தை நடத்தி வருகிறார். அகர்வாலுக்கும் தேசாய்க்குமிடையே வாடகை விவகாரத்தில் தகராறு இருந்தது. இதையொட்டி நடந்த வழக்கில், தற்காலிகமாக தேசாயை அதே இடத்தில் தொழில் நடத்த நீதிமன்றம் உத்திரவிட்டது.

இதனால் ஆத்திரமடைந்த அகர்வால், தேசாயை மிரட்டிப் பணிய வைத்து இடத்தைக் காலி செய்ய வைக்கும் நோக்கத்துடன், கூலிக்கு குண்டர்களை அமர்த்தத் தீர்மானித்தான். ஆனால், கிரிமினல் மாஃபியா குண்டர் படைக்கு பல இலட்சம் செலவாகும் என்பதால், வாட்டசாட்டமான வேலையில்லா இளைஞர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டான். ஒரு நாளைக்கு ரூ.100 சம்பளம் என்றும் இரவுக் காவலர் வேலை என்றும் கூறி, 50 இளைஞர்களைத் திரட்டினான். கடந்த ஏப்ரல் 4-ந்தேதியன்று பின்னிரவில், இவ்விளைஞர்களின் துணையுடன் தேசாயின் கடையை உடைத்த அகர்வால், அங்கிருந்த கணிப்பொறிகளை தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு, அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு கூறினான். இதற்கிடையே தகவல் அறிந்து போலீசார் அங்கு வந்ததும், பீதியடைந்த இளைஞர்கள் நாற்புறமும் தப்பியோடினர். அதில் 8 பேர் வளாகச் சுற்றுச் சுவர் மீதேறிக் குதித்த போது, அதையொட்டியிருந்த கிணற்றில் தவறி விழுந்து 5 பேர் நீரில் மூழ்கி மாண்டனர். மூவர் மட்டுமே உயிர் பிழைத்தனர். அவர்கள் போலீசாரிடம் இது பற்றி முறையிட்ட போதிலும், கிணற்றில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இளைஞர்களைக் காப்பாற்ற போலீசார் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.



தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தத் திரண்ட மக்கள்

ஒரு கிரிமினல் முதலாளியின் சுய நலனுக்காக 5 தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் உயிர் பறிக்கப்பட்டதை அறிந்து மும்பய் நகரமே கொந்தளித்தது. ஏப்ரல் 6-ந் தேதியன்று நடந்த இவ்விளைஞர்களின் சவ ஊர்வலத்திலும் பல்த்வாடி சுடுகாட்டிலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு தமது குமுறலை வெளிப்படுத்தினர். மக்களின் குமுறல் போராட்டமாக வெடிக்கும் முன்பாக, அகர்வாலைக் கைது செய்தும், மாண்டு போன இளைஞர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி செய்வதாகவும், இத்தகைய கொடுமைகளுக்கு முடிவு கட்டப் போவதாகவும் அரசு அறிவித்தது. ஆனால், கிரிமினல் நகரமாகிவிட்ட மும்பையில் ஓராயிரம் அகர்வால்களும் வறுமையும் வேலையின்மையும் உள்ளவரை இத்தகைய துயரங்கள் தொடர்கதையாவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

## புதிய பெயர்களில் அரங்கேறும் பயங்கரவாத "தடா" சட்டம்

அரசு பயங்கரவாத ''தடா'' சட்டம் மக்கள் உரிமை அமைப்புகளின், உழைக்கும் மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்புகளுக்குப் பிறகு கைவிடப்பட்டுள்ள போதிலும், புதிய பெயர்களுடன் அதே ''தடா'' சட்டம் இன்னும் கடுமையான விதிகளுடன் பல மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் ''பொடா'' என்ற பெயரில் நுழைய முயற்சித்து, இப்போது கைவிடப்பட்டுள்ள இப்பாசிசச் சட்டம், மகாராஷ்டிராவில் ''அமைப்பு ரீதியிலான குற்றத் தடுப்புச் சட்டம்'' என்ற பெயரில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. நாகரீகச் சமூகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகிவிட்ட கிரிமினல் - மாஃபியா குற்றக் கும்பல்களை ஒழிப்பது என்ற பெயரில் மகாராஷ்டிர சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இச்சட்டம், மேலவையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

இச்சட்டப்படி, சட்ட விரோதமான குற்றச் செயல்களைத் தனியாகவோ கூட்டாகவோ செய்பவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலிடப்படுவார்கள். அவர்களுக்கு ஆயுள் சிறைத் தண்டனையும் ரூ. 5 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். குறைந்தபட்ச தண்டனை ஐந்தாண்டு காலச் சிறைவாசம் ஆகும். குற்றம் சாட்டப்பட்டவரின் அனைத்துச் சொத்துக்களும் உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும். குற்றவாளியுடன் தொடர்புடைய எவரையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவுபவரையும் குற்றவாளியாக்கிச் சிறையிட போலீசாருக்கு அதிகாரம் வழங்கப்படும். குற்றவாளியைப் பற்றிய செய்திகளையோ, அவர் தரப்பு நியாயத்தையோ, வாக்குமூலத்தையோ பத்திரிகைகள் வெளியிட்டால், குற்றவாளிக்கு உடந்தையாகச் செயல்பட்டதாகக் கருதித் தண்டிக்கப்படுவர். போலீசுடன் மோதல் என்ற பெயரில் குற்றவாளி சுட்டுக் கொல்லப்பட்டாலும், பத்திரிகைகள் அதற்கு எதிராக எழுதினால் தண்டிக்கப்படுவர்.

குற்றவாளியின் இருப்பிடத்தைக் கண்டறிய, சந்தேகப்படும் எந்தவொரு நபரின் தொலைபேசியையும் போலீசார் ஒட்டுக் கேட்க உரிமை உண்டு. இச்சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். இவற்றில் நடக்கும் விசாரணைமுறை பற்றியோ, சட்ட வழிமுறைகள் பற்றியோ, அரசு தரப்பு சாட்சிகள், நீதிபதியின் செயல்பாடு பற்றியோ குறை கூறி நியாயம் கேட்கும் எந்த வழக்கும் நீதிமன்றங்களில் ஏற்கப்பட மாட்டாது. விசாரணைகள் மூடிய அறையினுள் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படாமல் இரகசியமாக நடைபெறும். சாட்சிகளிடம் அரசு தரப்பு வழக்கறிஞர் இரகசியமாக வாக்குமூலம் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம். விசாரணை எங்கு நடக்கிறது என்பதை சிறப்பு நீதிமன்றங்கள் இரகசியமாக வைத்துக் கொள்ளலாம்.

''தடா''வை விடக் கொடூரமான இச்சட்டம் நடைமுறைக்கு வந்தால், போலீசார் பொய்ச்சாட்சிகளை உருவாக்கி யார் மீதும் பொய் வழக்கு சோடிக்க முடியும்; மிரட்டிப் பணம் பறிக்க முடியும். குறிப்பாக, புரட்சிகர அமைப்புகள், ஜனநாயக உரிமைக்கான அமைப்புகள், அரசியல் எதிரிகளை ஆட்சியாளர்கள் பழிவாங்குவதற்கான ஆயுதமாக இது மாறிவிடும். போலீசார் யாரையும் சுட்டுக் கொன்றுவிட்டு, அவரைக் கிரிமினல் பேர் வழியாகச் சித்தரித்து, போலீசுடன் நடந்த மோதலில் மாண்டதாகக் கதை கட்ட முடியும். குற்றம் சாட்டப்பட்ட எவரும், காட்டுமிராண்டித்தனமான நீதிமன்ற வழிமுறைகளால் ஒருபோதும் தப்பிக்கவோ, நிரபராதி என்று விடுதலை அடையவோ சாத்தியமில்லை.

ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டங்களே கிரிமினல் மாஃபியாக்களை ஒழிக்கப் போதுமானவையாக உள்ள நிலையில், இப்புதிய சட்டம் போலீசாரின் கைகளில் வரம்பற்ற அதிகாரத்தைக் குவிப்பதாகும்; மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து அச்சத்தில் இருத்தி வைக்கும் இப்பாசிச சட்டத்தை எதிர்த்து மகாராஷ்டிர ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளும் வழக்கறிஞர்களும் போராடி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா





இதோ, ஏழு வயதான இச்சிறுவனின் பெயர் காந்தார்; பீகாரின் ஜார்கண்ட் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவன். காந்தார் பிறந்த பொழுதே, அவனுக்கு ஒரு கண் கிடையாது; சிறுவனாக வளர்ந்த பின்னும் இவனுக்கு பேச்சு வரவில்லை. காந்தாரால் எழுந்து நிற்க மட்டுமல்ல, உட்காரக் கூட முடியாது.


எழுந்து நடமாட கூடத் தெம்பில்லாமல் எலும்பும் தோலுமாக, படுத்த படுக்கையாகக் கிடக்கும் இவரின் பெயர் பஞ்ஜா துடு; இவரும் ஜார்கண்ட் பழங்குடி இனத்தைச்சேர்ந்தவர் தான்; நோயின் உக்கிரத்தால் மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருந்த இவரின் இறுதி மூச்சு இரு மாதங்களுக்கு முன்பு அடங்கிப் போனது.

பஞ்ஜா துடுவின் அவலமான அகால மரணத்திற்கும், காந்தார் பிறவி ஊனமானதற்கும் இந்திய அரசும், அதனின் அணு ஆயுத வெறியும் தான் காரணம்.

இந்திய அரசு, பீகார் - ஜார்கண்ட் பகுதியிலுள்ள ஜாடுகுடா கிராமத்தைச் சுற்றிதான் தனக்குத் தேவையான யுரேனியத்தை வெட்டியெடுக்கிறது; யுரேனியத்தைச் சுத்தப்படுத்திய பின், அந்த அணுக் கழிவுகளையும் ஜாடுகுடாவைச் சுற்றி தான் கொட்டிக் குவித்து வருகிறது. யுரேனியத்தை வெட்டியெடுக்கும் பொழுதும், அணுக் கழிவுகளைச் சேமித்து வைக்கும் பொழுதும் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிகளை இந்தியா காற்றில் பறக்க விட்டு விட்டதால், ஜாடுகுடா பகுதி இன்று ஆடு-மாடுகள் வசிக்கக் கூட லாயக்கற்றதாகி விட்டது.

புற்று நோய், காசநோய், சிறுநீரகக் கோளாறு, நரம்புத் தளர்ச்சி, மூளைச் சிதைவு, கருச் சிதைவு - எனப் பலவிதமான நோய்கள் ஜாடுகுடாவைச் சுற்றி வாழ்ந்து வரும் பழங்குடி இன மக்களைத் தாக்கி முடமாக்கி விடுகிறது.

1994-ஆம் ஆண்டில் 17 பேர்; 95-இல் 14 பேர்; 96-இல் 19 பேர்; 97-இல் 21 பேர் - இது அணுக்கதிர் வீச்சால் இறந்து போன ஜார்கண்ட் சுரங்கத் தொழிலாளர்களின் பட்டியல்.



இந்தப் படத்தில் நாம் காண்பது மருத்துவப் பரிசோதனைக் கூடமல்ல; நாட்டிலேயே முதன் முறையாக தில்லியில் திறக்கப்பட்டுள்ள ஆக்ஸிஜன் விற்பனைக் கூடம். படத்தில் காணப்படும் நபர், சுத்தமான காற்றை விலை கொடுத்து வாங்கி சுவாசித்துக் கொண்டிருக்கிறார்! தில்லியில் காற்று நஞ்சாகி வரும் அபாயத்தைப் பார்க்கும் பொழுது, இது போன்ற ஆக்ஸிஜன் விற்பனைக் கூடங்கள் இன்னும் ஏராளமாக வர வேண்டும் என்கிறார் இதன் உரிமையாளர். ஆனாலும், தில்லியில் வாழும் அனைவரும் இந்த வசதியை அனுபவித்து விட முடியுமா என்ன? அரை மணி நேரத்திற்கு இருநூறு ரூபாய் செலவழிக்கும் வசதி படைத்தவர்கள்தான் இந்த விற்பனைக் கூடத்திற்குள் நுழையவே முடியும்.

வசதி படைத்தவர்களுக்கு தான் இந்த நாட்டில் எத்துணை சௌகரியங்கள்... சாதாரண மக்கள் சுத்தமான குடிநீருக்கு தினமும் அல்லாட வேண்டியிருக்கிறது; அவர்களுக்கோ ''மினரல் வாட்டர்''. சாதாரண மக்களுக்கு நஞ்சாகிப் போன காற்றைச் சுவாசிக்க வேண்டியதுதான் தலையெழுத்தென்றால், அவர்களுக்கோ ''ஆக்ஸிஜன் பார்''; இப்படி இன்னும் பல.

இந்த உலகில் உயிர் வாழ அவர்களுக்கு மட்டும்தான் உரிமையுண்டா? ''தொழில் வளர்ச்சி'' என்ற பெயரில் இயற்கை ஆதாரங்கள் நஞ்சாக்கப்பட்டு உழைக்கும் மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்படுவதை இனியும் அனுமதிக்கலாமா?

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at, EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/MS(S) 622 / 99
www.padippakam.com

